பாபு தையல் இயந்திரம்
திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி
நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –372

## பர்தாவுக்குள் மறைந்திருக்கின்றதா? பயங்கரவாதம்...




## ஜெனீவா விவகாரமும் அரசின் நிலைப்பாடும்

## மூன்றாம் உலக யுத்தத்தை நோக்கி நகரும் ரஸ்யா, சீனா

## இலங்கை – இந்திய அரசியல் சகதியில் சிக்கித்தவிக்கும் மீனவச் சமூகம்

30 ஆண்டுகள் புரையோடிப்போயிருந்த யுத்தத்தில் அரசுடன் இணைந்து செயற்பட்டு வந்த முஸ்லீம் தரப்பு தற்போது யுத்தம் முடிவடைந்துள்ள காலப்பகுதியில் அவர்களை ஏணிபோன்று பாவித்து அவர்களை தரையில் வீழ்த்தியுள்ளனர் என்பது முஸ்லீம் மக்களை விமர்சனத்திற்குள்ளாக்கியுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர், முஸ்லீம்கள் பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர் என்பது உண்மை. இதனை யாராலும் மறுக்க முடியாது. தற்போதைய அரசு நீதியமைச்சைத் தவிர வேறு எந்த அமைச்சுப் பதவிகளையும் முஸ்லீம் மக்களுக்கு வழங்காத நிலையிலும், கடந்த காலங்களில் பள்ளிவாசல்களில் தாக்குதல்கள் நடாத்தப்பட்ட நிலையிலும், அவற்றிற்கானத் தீர்வின்றி இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. தமிழினத்தைப் போலவே இன்று தொடர்ந்தும் முஸ்லீம் மக்கள் மீது வன்முறைக் கலாச்சாரத்தினை கட்டவீழ்த்துள்ள நிலையிலும், முஸ்லீம் தரப்பு அனைத்து தரப்பினர் மத்தியிலும் சாதுரியமான முறையினைக் கையாண்டு வருவதனால் நிலைமை ஓரளவுக்குள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. எது எவ்வாறெனினும் யுத்த சூழல் முடிவுற்று இன்று இந்நாட்டில் அமைதியான சூழல் உண்மையினை அறியாது திரிபுபடுத்தல்களுடன் சுடச்சுட என்ற போர்வையில் செய்திகளை வெளிக்கொண்டு வருவதே இன்று பல சமூக வலைதள உலாவிகள் பெரும்பாலானோரின் செயற்பாடாக இருக்கிறது.

அன்று நடைபெற்ற சம்பவம் தொடர்பில் குறித்த கல்லூரியின் அதிபர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எங்களுடைய பாடசாலை ஒரு பெண் பாடசாலை. தனித்துவமான கலாச்சார விழுமியங்களைக் கொண்டு இயங்கிக்கொண்டிருக்கின்ற பாடசாலை. 1923ஆம் ஆண்டு தங்கம்மா சண்முகம்பிள்ளை என்கிற ஒரு பெண்மணியினால் உருவாக்கப்பட்ட பாடசாலை. சைவமும் தமிழும் தழைத்தோங்கவேண்டும் என்கின்ற நன் நோக்கோடு தன்னுடைய பொருட்செல்வம் அனைத்தையும் வழங்கி பெரும் வள்ளலால் பாடசாலையை எமக்கு அளித்திருக்கின்ற அரும்பெரும் கொடை என்று நாங்கள் நினைத்துக்கொண்டு எங்களுடைய பணிகளை நாங்கள் ஆற்றிக்கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் எமக்கு ஏற்பட்ட துரதிஸ்டவசமான சில செயற்பாடுகளினால் உள்ளத்தாலும் உடலாலும் நாம் மிகவும் வேதனையடைந்த நின்று, பெற்றோரது வருகையையும் அவர்கள் சென்றுகொண்டிருப்பதையும் வீடியோ செய்துகொண்டிருந்தார். அவ்வேளையில் அவ் வகையான வீடியோவினை எடுக்கவேண்டாம் என நான் அவரிடம் பலமுறை கூறியும் அவர் செவிமடுக்காத நிலையில் அவ்வேளையில் எமது பெற்றோர்கள். 2018 ஆம் ஆண்டு இந்த கலாச்சார விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட ஆடைகளை அணிந்துவந்தபோதும் இவர் இவ்வாறான வேலையைச் செய்தார் இன்றும் இவ்வாறான வேலையைச் செய்கிறார் என்றால், இப்படிப்பட்டவர் எங்களுடைய பாடசாலைக்குத் தேவையில்லை என்கின்ற ஒரு கருத்தினை முன்வைத்து சத்தமிட்டபடியே அவர்கள் செயற்பட்டனர்.

இவ்வேளையில் குறித்த ஆசிரியர் சடுதியாகத் திரும்பியவேளையில் என்னை கதிரையில் தள்ளிவிட்டார். அப்போது எனது தலை அடிபட்டு நான் சற்று நிதானம் இழந்திருந்தேன். இருப்பினும் இதனை சீர்செய்துகொண்டு எழுந்து நின்றபோது எனக்கு உடல் வியர்த்து தாகமாகவும் உடல் அசதியாகவும் இருந்தது. நிதானமாகச் செயற்பட எனது உடல் எனக்கு மறுப்பு தெரிவித்தது. அவ்வேளையில் இதைக் கண்ணுற்ற எனது அலுவலகத்தில் பொறுப்பேற்கவேண்டும். இந்த இரண்டு நிலைமைகளும் தாமதமடைந்தபடியால் அவரால் உரிய நேரத்திற்குள் கையொப்பம் இடுவதற்கு தவறியிருந்தார் என்பதை எமது சகோதரர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சண்முகா இந்து மகளிர் கல்லூரி என்பது திருமலை நகரப் பகுதியில் அமைந்திருந்தாலும் பல்வேறு இனத்தவர்களுடைய கல்வித் தேவையை பூர்த்தி செய்து வருகின்ற ஒரு கலைக்கூடமாக அது செயற்பட்டு வருகின்றது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். எங்களுடைய பாடசாலையில் கலை மட்டுமல்ல கல்வி, பண்பாடு, அறிவியல், புத்தாக்கம், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வெற்றிகள் என்று பலவற்றை நாம் சொல்லிக்கொண்டே போகலாம். அத்துடன் ஒழுங்கு, ஒழுக்கக்கட்டுப்பாடுகள், மனித விழுமியங்கள், கலாச்சாரப் பண்பாடுகளையும் கட்டிக்காக்கின்ற ஒரு பொக்கிசமாகத்தான் நாங்கள் இப்பாடசாலையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் கடமையாற்ற வந்திருக்கின்ற ஆசிரியர்கள் இன மத வேறுபாடுகளின்றி ஒற்றுமையாகவே கடந்த காலங்களில் அவர்கள் செயற்பட்டு இருக்கின்றார்கள்.

# பர்தாவுக்குள் மறைந்திருக்கின்றதா பயங்கரவாதம் – திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் விவகாரத்தில் நடப்பது என்ன?

நிலவிக்கொண்டிருக்கும் நிலையில், திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் இடம்பெற்ற விவகாரம் இன்று தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையே இருக்கக்கூடிய உறவினை பிரித்தாளுகின்ற சூழல் உருவாகியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அப் பாடசாலையில் அன்றைய தினம் நடந்த விடயத்தின் உண்மைத்தன்மையினை வெளிக்கொண்டு வருவதில் ஆளாலுக்குப் போட்டிபோட்டுக்கொண்டு பல சமூகப் போராளிகள் செயற்பட்டதைக் காண முடிந்தது. ஆதங்கத்தில் இலங்கையின் முன்னணி பத்திரிகைகள் பகிரங்கமாக எரிக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியது. கிடப்பில் போடப்பட்ட முஸ்லீம் மக்களின் ஆடை விவகாரம் மீண்டும் தூசுதட்டி எடுத்ததைப்போன்று, நீதிமன்ற உத்தரவுடன் கடமைக்குச் சென்றதாக குறித்த ஆசிரியர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் தான் தாக்கப்பட்டதாகவும், தனது கழுத்து நெரிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் குறித்த ஆசிரியை தெரிவித்த கருத்தின் அடிப்படையில், இன்று தமிழ் - முஸ்லீம் சமூகத்திற்கு இடையில் பிரச்சினைகள் பூதாகரமாக கிளம்பியுள்ளது. பலர் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகின்ற செயற்பாட்டினை இப் பாடசாலையின் விடயத்தில் திறைமறைவில் கட்டவிழ்த்தும் விட்டுள்ளனர். பாடசாலையிலும் இனவாதத் தீயினை வளர்க்க ஆரம்பித்துள்ளதாகவே நடைபெற்ற சம்பவத்தின் பின்னரான பலரது திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களின் மூலமாக அறிய முடிகின்றது. கடந்துசெல்லவேண்டிய விடயத்தைப் பெரிதாக்கி, குளிர்காய எத்தணித்த கூட்டம் தொடர்பில் தமிழ் - முஸ்லீம் மக்கள் அவதானமாக இருக்கவேண்டிய தருணம் இது.

கடந்த காலங்களில் முஸ்லீம் மக்களின் பர்தா உடைகளை அணிந்து தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டவர்களைக் காரணங்காட்டியும், தற்போதைய சூழலில் திரிபுபடுத்தும் வகையிலும் நிலைமைகள் மோசமடைந்துள்ளது. இனமோதல்களை ஏற்படுத்துவதற்கான சமிக்ஞைகளை பலர் வெளிப்படுத்தி வருகின்றமை கண்டனத்திற்குரியது. இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக செயற்படவேண்டிய தேவை தமிழ் மற்றும் முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு இருக்கிறது. மக்கள் நிதானமாகச் செயற்படவேண்டும். இவ்விவகாரத்தின் உண்மைத்தன்மையினை உடன் அறிய முடியாதுவிட்டாலும், குறித்த பாடசாலையின் அதிபர் மருத்துவமனையில் இருந்து வந்ததன் பின்னர் அப்பாடசாலையில் நடந்த விடயத்தினை தெளிவுபடுத்தினார்.



ஒரு சமூகமாக நாங்கள் நின்றிருப்பதையிட்டு மிகவும் மனவருத்தம் அடைந்திருக்கின்றோம். 02.02.2022 அன்று எமது பாடசாலைக்கு வருகைதந்த பாத்திமா பஹ்மிதா அவர்கள் பாடசாலைக்கு வருகை தந்திருக்கின்றார். அன்றைய தினம் என்னுடைய கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக நான் வெளியில் சென்றிருந்தேன். அலுவலகத்தில் இருக்கவில்லை. அதன் பின்னர் என்னுடைய காலை நிகழ்வுகளை நடாத்துவதற்கு வருகை தந்து காலைக் கூட்டத்தை முடித்துவிட்டு, க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு விடுமுறை காலச் செயற்பாடுகளை நடாத்துவதற்காக ஒரு ஆலோசனை வழிகாட்டல் கூட்டத்தை ஒழுங்குசெய்ய வேண்டிய நிலையில், அந்த ஆலோசனைகளை செய்துமுடித்துவிட்டு எனது அலுவலகத்திற்கு வருகை தந்தபோது,

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பரிசளிப்பு விழா ஒழுங்கினை மேற்கொள்வதற்காக வருகைதந்த பெற்றோர்கள் எமது பாடசாலையில் கலாச்சார விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட ஆடையை அணிந்திருந்த ஆசிரியரைக் கண்ணுற்றதும் அவர்கள் எனது அலுவலகத்தினை நோக்கி வந்திருந்தனர். இவ்வேளையில் இவ் ஆசிரியரை இந்த ஆடையோடு விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட ஆடையோடு கற்பித்தல் பணிக்கு அனுப்பக்கூடாது என்கின்ற ஒரு விண்ணப்பத்தை எமக்கு அளித்திருந்தனர். அதனை செவியுற்ற நாம் அவர்களை அலுவலகத்திலிருந்து கலைந்து செல்லுமாறு நான் கூறினேன். அவ்வேளையில் என்னுடைய கூற்றுக்கு அவர்கள் மதிப்பளித்து அலுவலகத்தினை விட்டுச்சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் கதிரையில் அமர்ந்திருந்த பாத்திமா பஹ்மிதா அவர்கள், ஓடிச்சென்று எனது அலுவலகத்தில் மூன்று பகுதியாகச் பிரிகின்ற இடத்தில் அதாவது நடுவில் இருந்த உதவியாளர் அவர்கள் என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்ல முற்பட்டனர். பாத்திமா என்கிற ஆசிரியர் பாடசாலைக்கு தன்னுடைய கடமைகளை நிறைவேற்ற வந்தவர் என்று அவர் குறிப்பிடுகின்றபோது எங்களுடைய பாடசாலையின் விழுமியங்களுக்கு அப்பால் அவர் மூன்று விதமான விடயங்களைச் செயற்படுத்தியிருக்கின்றார்.

**01. அவர் எங்களுடைய விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட ஆடையினை அணிந்தமை.**
**02. அவர் பாடசாலையினுடைய அதிபரின் அனுமதி பெறாமல் தன்னுடைய கையடக்கத் தொலைபேசியில் பாடசாலையில் நடந்த நிகழ்வுகளை வீடியோ எடுத்தமை.**
**03. அவரைப் பாதுகாக்க நாங்கள் இருந்தும் எங்களைக் கவனிக்காமல் அவர் பலருடன் தொடர்புகொண்டமை.**

பாடசாலை என்பது ஒரு சமூகம் சார்ந்த நிறுவனம். சமூகத்தினுடைய அங்கீகாரத்தினைப் பெற்று செயற்படவேண்டிய அவர்கள் சமூகம் வெறுக்கத்தக்கதாக செயற்பாடுகளை அன்றையதினம் செயற்படுத்தியமையினால் சமூக முரண்பாடுகள் ஏற்படுவதற்கு அவை வழிசமைத்திருந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். என்னுடைய செயற்பாட்டில் தவறு இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவ்வளவு நேரம் ஏன் அவர் கையெழுத்துப் பதிவேட்டில் கையொப்பம் இடவில்லை என்ற கேள்வி என்னை நோக்கி எழுந்திருக்கின்றது. தற்போது கைவிரல் அடையாளம் என்கிற ரீதியில் நாங்கள் கையொப்பம் இடுகின்றோம். கைவிரல் அடையாளத்தை பதிவுசெய்ததன் பின்னர் நாங்கள் கையொப்ப பதிவேட்டில் கையொப்பம் இடுகின்றோம். இந்த நிகழ்வுக்கு முன்பு நாங்கள் அவருடைய கடமைகளைப் எங்களுடைய விழுமியங்களை அவர்கள் மதித்துச் செயற்பட்டிருக்கின்றார்கள். அதனால் பாடசாலை ஒற்றுமை பலம்கொண்ட பீடமாக அது மிளிர்ந்துகொண்டிருந்தது. தற்போது 99 வருடங்களை இந்த பாடசாலை நிறைவுசெய்திருக்கிறது. தற்போது 100வது வருடத்தினைக் கடக்கின்றபோது எமது அயல் சகோதரர்களோடு ஒரு உளவியல் ரீதியான மனக்கசப்பான உணர்வோடு செயற்படப்போகின்றோமே என்கிற ஒரு ஏக்கம் எம்மை தினமும் வாட்டிவதைக்கின்றது.

அன்பான சகோதரர்களே ஒற்றுமையே பலம் என்று குறிப்பிடுவார்கள். இந்த நிலையில் எமது பாடசாலையில் முஸ்லீம் மாணவர்கள் பலர் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கு இணையான கல்வி வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழகங்களுக்கும் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்கள் என்ற பெருமிதத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ஏனெனில் ஒரு சிலருடைய தகாத செயற்பாடுகள், தகாத மனோபாவங்கள், தங்களுடைய உளவியலில் வருகின்ற தீர்க்க தரிசனமற்ற சிந்தனைகள் ஒரு சமூகத்தினுடைய விளைவுக்கு மூல காரணமாக அமைகின்றது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் என சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் இச்சம்பவத்தின் பின்னணியைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இப்பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் இச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் இன்றைய பேசும்பொருளாக இருக்கின்ற பிரச்சினை சம்பந்தமாக சில கருத்துக்களை முன்வைக்கவேண்டிய கடமைப்பாட்டில் இருக்கின்றோம். இச்சம்பவம் நடைபெற்றதன் பின்னர் எமது பாடசாலையின் அதிபர் சிகிச்சைக்காக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காரணத்தினாலும், தகவல்களை வழங்குவதில் உள்ள சில நிர்வாக சிக்கல்கள் காரணமாகவும் உடனடியாக கருத்துக்களை வெளியிட முடியாத நிலையில் இருந்தமைக்காக வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கடந்த 02.02.2022 புதன்கிழமை காலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பாக நேர்த்தியாக சித்தரிக்கப்பட்ட உண்மைக்குப் புறம்பான ஒருபக்கச் சார்பான நாடகமொன்று அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்பதே உண்மை.

**11 ஆம் பக்கம் பார்க்க...**

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் அவசியம்

அன்றிலிருந்து இன்று வரை இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கான பாதை கரடுமுரடானதாகவே காணப்படுகின்றது. அன்று தெற்கில் இருந்த சிங்கள ஆட்சியாளர்களும். இன மத தீவிரப் போக்குடையவர்களும் இலங்கையில் வாழும் மூவின மக்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொண்டேயிருந்தனர். அதனது தொடர்ச்சியாகத் தான் இந்நாட்டில் சிங்கள - தமிழ் மக்களுக்கிடையிலான மோதல் போக்குகள் அதிகரித்தன. நாட்டில் அமைதியின்மை நிலவியது. யுத்த சூனியத்திற்குள் வடகிழக்கு மாகாணங்கள் தள்ளப்பட்டன. இந்த வன்முறைகள் முஸ்லீம் மக்களையும் விட்டுவைக்கவில்லை. பௌத்த மதம் தான் இந்நாட்டை ஆளவேண்டும். இந்நாடு தனிச்சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியது. இலங்கை முழுவதும் சிங்களவர்களே வாழ்ந்தனர் என்கிற ரீதியிலான போலிப் பிரச்சாரங்கள் அன்று மாத்திரமல்ல இன்றும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடுதான் இலங்கையில் பாரிய அழிவுகளை. இழப்புக்களை. ஏற்படுத்தியது. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்குப் பதிலாக எண்ணெய் ஊற்றி இனவாதத் தீ வளர்க்கப்பட்டது தான் இலங்கையின் இன்றைய பல பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம்.

ஆனால். அன்று இருந்த தெற்கின் இனவாத சிந்தனை இன்று இருந்தாலும். மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. இன்றைய தெற்கின் பல அரசியல்வாதிகள். பல சிங்கள மக்கள் வடகிழக்கில் வாழும் தமிழ் - முஸ்லீம் மக்களது அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும். தீர்க்கப்படவேண்டிய விடயங்கள் குறித்தும். வழங்கப்படவேண்டிய அரசியல் தீர்வுகள். அபிவிருத்திகள் குறித்தெல்லாம் தெளிவான பார்வையினைக் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மை. யுத்தத்தை விரும்புபவர்கள் இன்றைய சிங்கள மக்கள் அல்ல ஆனால் அவர்களைக் குழப்புவதற்கான கூட்டம் இன்றும் இல்லாமலில்லை. மனிதனொருவன் தான் விரும்பியதைச் செய்வதற்கு அவனுக்கு பூரண அனுமதி உண்டு. அதனைக் குழப்புவதற்கு யாருக்கும் உரிமையில்லை. அவனது மதம். மொழி. கலாச்சாரம் குறித்த விடயங்களை நாம் விமர்சிக்கவோ கேள்விக்குட்படுத்தவோ முடியாது. அவரவர் அந்தந்த இடங்களுக்கேற்ப ஒழுக்க கலாச்சார விழுமியங்களை. சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பது அடிப்படையான விடயம். அதுவே ஒரு சிறந்த சமூகத்தினை உருவாக்கவும் வழிவகுக்கும். இந்நாட்டில் வாழும் மக்களுக்கிடையில் விட்டுக்கொடுப்பு. புரிந்துணர்வு. உதவிசெய்யும் மனப்பாங்கு போன்ற விடயங்கள் இன்னமும் வலுப்படுத்தப்படவேண்டும். சக மனிதனையும் மனிதனாக மதிப்பதற்குத் தெரியவேண்டும். பிறந்தோம் மரணித்தோம் என எமது வாழ்க்கை சுருங்கிவிடக்கூடாது. இந்நாட்டின் கடந்த காலத் தலைவர்களின் தவறுகளும். அன்றைய சூழலும். பூகோள சதிவலைகளும். அரசியல் போக்குகளும். பொருளாதார நெருக்கடிகளும். யுத்த நிலைமைகளும் தான் இம் மூவின மக்களுக்குள்ளும் குரோதங்களை. வெறுப்புக்களை ஏற்படுத்தியது. இந்நிலைமை தொடர அனுமதிக்க முடியாது. இப் பிரிந்துகிடக்கின்ற இனங்களை சமாதானம். நல்லிணக்கம் என்கிற பாதையில் இணைக்கவேண்டியது இன்றைய இலங்கையின் அபிவிருத்திக்கும். நாட்டின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கும் தேவையானதொன்று. அதற்கு தெற்கு சிங்கள அரசியல் அதிகாரம் மிக்கவர்களிடத்தில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். இந்நாட்டில் மதத் தலைவர்களின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். கடந்தகால கசப்பான சம்பவங்களுக்குப் பின்னால் ஒழிந்திருக்கின்ற பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கு வழங்கப்படவேண்டும். பிரச்சினைகளை வைத்துக்கொண்டு இன்று நல்லிணக்கம் குறித்துப் பேச முடியாது. அரசியல் தலைவர்கள் அனைவரும் இணைந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டு மக்களுக்காகத்தான் நாட்டின் சட்டங்கள் செயற்படவேண்டுதே தவிர. தனி நபரின் தேவைகளுக்கேற்ப அல்லது தனி ஒரு இன மக்களின் விருப்பங்களுக்காக அல்ல. எனவே. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்குத் தேவையான ஆரோக்கியமான மாற்றங்கள். எமது நாட்டின் அரசியலில் கட்டாயம் தேவை.

# 177 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



அவர்களிடத்தில் அமைப்பின் மீதான மூலகாரணப் பற்று இருக்காது. அவர்கள் சகல இடங்களிலும் எப்பொழுதுமிருக்கின்ற நெருக்கடியான வாழ்க்கைக்குத் தங்களை பழக்கப்படுத்திக்கொள்ளமாட்டார்கள்.

இதுவே பின்வரும் விடயத்திற்குப் பிரதான காரணமாகும். அதாவது அரச வேவு முறியடிப்பாளர்கள் இதனைக்கொண்டே இவ்வாறான ஆட்களை ஒப்பீட்டளவில் இலகுவாகச் சேர்த்துக் கொள்கின்றனர். கூடுதலானோர்கள் சாத்தியமான பிரகாசமான எதிர்காலத்திற்காகப் போராடுகின்றார்கள். இதற்குள் மனத் தாங்கலுக்குள்ளானவர்கள் அடாத செயல்புரிபவர்கள், குற்றவாளிகள் போன்றோரும் இருப்பார்கள். ஆனால், பிரதான கெரில்லாக் கூட்டம் யாதெனில், பிரதேச மக்களின் குடியானவர்களாவார்கள். நடவடிக்கைக்காரர்கள் இவர்களின் முழு விவரமடங்கிய பண்பின் மேல் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. குடியானவர்கள் வெளிப்பார்வைக்கு தெரிவது போல, சாதாரணமானவர்கள் அல்ல. அவர்கள் சுதந்திரப் பிரிவர்கள், நிர்வகிக்கக் கடினமானவர்கள், தந்திரமானவர்கள், சாமர்த்தியமானவர்கள்.

சகல தேசியத்தைச் சேர்ந்த குடியானவர்களதும் முதலாவது வாழ்க்கை நோக்கம் உயிர்வாழ்தலாகும். எவ்வாறான அரசியல் நிகழ்வுகளின் போதும் உயிர்வாழ்தலாகும். ஆட்சி மாறுகின்றது. ஆனால் குடியானவர்கள் மாறுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் மிகவும் பிரதானமானது உறவுத் தொடர்புகளும் பொருளாதாரத் தொடர்புகளுமாகும். இதற்கு எதிராக அவர்கள் செயற்படமாட்டார்கள். கிராமத்தில் எதனையும் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள். இன்றியமையாத சகல வாழ்வாதாரத் தகவல்களைக் குடியானவர்கள் இயல்பாக, தொடர்ச்சியாகச் சேகரிக்கின்றார்கள். இவற்றைக்கொண்டு வேகமாகச் சரியான முடிவை எடுக்கின்றார்கள். அவர்கள் இயற்கையை அவதானிப்பவர்கள், செய்திகளை வேகமாக ஒப்பிடும் பண்பையும் நிலைமையை உடனடியாகக் கணித்துக்கொள்ளும் பண்பும் கொண்டவர்கள். விசாரணைகளின் போது மிக நன்றாக நடிப்பார்கள். உண்மையாகத் தங்கள் மார்பிலடித்துச் சொல்வார்கள். "நான் பங்கு பற்றவில்லை, அங்கிருக்கவில்லை, எடுக்கவில்லை, பார்க்கவில்லை, எனக்குக் கேட்கவில்லை, தெரியாது, நினைவில்லை" இவ்வாறு பதிலளிப்பார்கள். அவ்வாறு இருக்க முடியாது. குடியானவனின் நினைவுசக்தி அபூர்வமானது. எச் சந்தர்ப்பத்திலும் அவன் நடவடிக்கையாளர்களுக்கு வேண்டிய முக்கியத்துவமான தகவல்களைக் கொண்டிருப்பான். ஆனால் அவன் மேல் நடவடிக்கையாளர்களுக்கு நன்கு தெரிந்த விளையாட்டுக்கு முரணான விதிகளைப் பயன்படுத்திய பின்னரே உண்மை சொல்ல ஆரம்பிப்பான்.

குறிப்பாகக் குடியானவனின் தரப்பிலிருந்து விடயமெடுக்க வேண்டியுள்ள நிலையில் அவனுடன் உளவியல் விளையாட்டு விளையாடக்கூடாது. உளவியல் ரீதியில் குடியானவனைத் தோற்கடிக்க முடியாது. ஏனெனில் அவனது சிந்தனை எவ்வளவுக்குத் தர்க்க மட்டத்தில் தோன்றுகின்றதோ அவ்வளவுக்கு உளவியல் சக்தி மட்டத்திலும் தோன்றுகின்றது. குடியானவனை ஏமாற்றலாம். ஆனால் ஒரு போதும் அதனைச் செய்யக்கூடாது. நகர்ப்புற நடவடிக்கையாளனால் .தனைப் புரிந்துகொள்ள முடியாது.

குடியானவனின் பலவீனம் பயம் ஆகும். மிகக் கொடுமையான சூழ்நிலைக்கு முன்னால், குறிப்பாகப் பயம் குடியானவனைப் பேச வைக்கின்றது. மிக நன்றாகப் பேச வைக்கின்றது. உளவியல் ரீதியான கோபமூட்டுதல்களைப் பயன்படுத்தாத, மாற்றமுடியாத உண்மையான வலிமையின் முன் ஏற்படுகின்ற பயம் அவனைச் சிதறடிக்கின்றது. குடியானவனிடம் எவ்வளவுக்குக் கூடுதலாக வெளியே அகங்கார வலிமை இருக்கின்றதோ, அவ்வளவுக்குக் கூடுதலாகச் செயலிழக்கச் செய்கின்ற, விலங்குகளுக்கேயுரிய பயவுணர்வு உள்ளே இருக்கும். குடியானவர்கள் சமரிடுவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், எச்சந்தர்ப்பத்திலும் வலிமையில் விஞ்சிய எதிரியுடனாக இருக்கக்கூடாது. அதிகாரத் தரப்பினரின் கட்டுப்பாடின்மையைப் பயன்படுத்தி, இரவு வேளைகளில் களவாடல்களையும் மேற்கொள்ளலாம். எதிர்ப்பியக்கத்தில் இவ்வாறான சம்பவத்தில், அதாவது யார் எங்களுடன் இல்லையோ, அவர்கள் எங்களுக்கெதிரானவர்கள் என்ற கோட்பாட்டுக்கமையக் கெரில்லாக்கள் நேரடியாகக் கொன்றொழித்த ஆட்கள் அதிகமாகும். இரண்டாம் உலகப்போரின்போது, கூடுதலான கெரில்லாக் கட்டளையாளர்களின் பணியாக, ஜேர்மனியர்களின் ஆக்கிரமிப்பின் போது களத்தைவிட்டோடி, வீடுகளுக்குச் சென்றுள்ள ஆயிரக்கணக்கான படையை விட்டோடிகளைக் கெரில்லாக் கொடியின் கீழும் ஆயுதத்தின் கீழும் கொண்டுவருவதாகவே இருந்தது. கெரில்லாப் போரை வெற்றிகரமாக நடத்துவதற்கு இந்த எதிர்ப் பண்புகளைக் கொண்ட, கட்டுப்பாட்டுக்குள் இருக்க விரும்பாத மக்கள் அனைவரையும் ஒழுங்குபடுத்த வேண்டும். அத்துடன், கடினமான ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குள் இருக்க அவர்களைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கவும் வேண்டும். இதனைக் கெரில்லா உட்கட்டமைப்பை உருவாக்குகின்ற, தயார்ப்படுத்தப்பட்ட நிபுணர்களைக் கொண்டுள்ள தலைமைத்துவக் குழுக்கள் மாத்திரமே மேற்கொள்ளலாம்.

எப்பொழுதும் கெரில்லா அமைப்பு மக்கள் மீதும் அவர்களது மனப்பாங்கின் மீதும் சாத்தியமானளவு கூடுதல் பூரண கட்டுப்பாட்டை வைத்திருக்க முயற்சிக்கின்றது. மனப்பாங்கு விருப்பத்திற்கேற்றவாறு இல்லையாயின், அதனை உருவாக்கி, வேண்டிய போக்கில் வைத்திருக்கவேண்டும். இந்த முயற்சியைக் கைநழுவிவிடக்கூடாது. கெரில்லாப் போரில் யாருடைய தரப்பில் மக்கள் இருக்கின்றனரோ அத்தரப்பினரே வெல்வார்கள். மக்கள் - இது எதிர்ப்பியக்க வீரர்களின் சேமப்படையாகும். இதுவே உணவுப் பொருட்களின் மூலமாகும் (கூடுதலான சந்தர்ப்பங்களில் உணவுப்பொருட்களை எங்கிருந்தும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை). இதுவே வெதுவெதுப்பான ஓய்விடம், குளியலிடம், காயமடைந்தவர்களுக்கான மருத்துவமனை, சூடான உணவு அத்துடன் பெண்கள் அங்கே ஆண்களின் தேக ஆரோக்கியத்திற்காக உழைக்கின்றார்கள். அவர்களை விலகியிருக்குமாறும் கூறமுடிவதில்லை. இறுதியாக மக்களே எதிர்ப்பியக்கத்தின் முகவர்கள், கண்கள், ஒற்றுக்கேட்கும் கருவிகளாவார்கள்.

ஆனால், மறுபக்கத்தில் இயற்கையில் பேராசை கொண்ட பிற்போக்கான சிந்தனை கொண்ட குடியானவர்கள் அக்கணப்பொழுதைத் தமக்கு நன்மையானதா அல்லது இல்லையா என எடைபோடுகின்றார்கள். இந்த இடத்தில்தான் அவன் அதிகாரத் தரப்பினருடன் சேர்ந்தியங்கத் தொடங்குகின்றான். அதிருப்தியாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், பழிதீர்க்கும் நோக்கைக் கொண்டவர்கள், பொறாமை கொண்டவர்கள், சாதாரணமாக வம்பு செய்பவர்கள் போன்றோர் அதிகாரத் தரப்பினரிற்கு உதவுகின்றனர். அதாவது, எளிதில் கோபமடைகின்ற, கெட்ட சிந்தனை கொண்ட, அற்பக் குடியானவர்கள். மிக மிக நுட்பமாகத் தயார்ப்படுத்தப்பட்ட நட வடிக்கையாளர்கள் இம்மாதிரியான ஆட்களை இலகுவாகக் கண்டுகொள்கின்றனர்.

இவ்வாறானவர்களை எவ்பொழுதும் எங்கேயும் தேடிக்கொள்ளலாம். அதிகாரத் தரப்பினருடனான முகவர் உறவைத் தடுப்பதற்காக ஒவ்வொரு மக்கள் வாழ்விட நிலைகளிலும் எதர்ப்பியக்கம் மூன்றுக்குட்பட்ட தமது தகவலாளர்களை நியமிக்கின்றது. இத் தகவலாளர்கள் தங்களில் ஒருவரையொருவர் தெரிந்தவர்களாக இருக்கமாட்டார்கள். ஆகவேதான், இவர்களில் ஒவ்வொருவரும் பிற தகவலாளர்கள் உள்ளடங்கலாகக் கிராமத்தில் வசிக்கின்ற சகலரைப் பற்றியும் காட்டுக்குத் தகவல் அனுப்புகின்றனர். இவ்வாறாக வேவு மற்றும் எதிர்வேவுத் தகவல்களின் நம்பகத்தன்மை கட்டுப்படுத்துகின்றது. மக்கள் வாழ்விட நிலையங்களிலிருந்து கெரில்லாப் படைகளுக்குத் தகவல்களைத் தெரிவிக்கின்ற தொடர்பாளர்கள் அமைப்பு நிச்சயமாக இருக்கும்.

**தொடர்வான்....**

**நெற்றிபொறியன்**



# ஜெனீவா விவகாரமும் அரசின் நிலைப்பாடும்

யுத்தம் நிறைவுபெற்று 12 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியிலான தீர்வுத்திட்டங்கள் இன்னமும் நிலைநாட்டப்படவில்லை என்கின்ற ஆதங்கங்கள் தற்பொழுது தமிழ் தரப்புக்களால் எழுப்பப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து வந்த அரசுகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களுக்கானத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் அசமந்தப்போக்கில் செயற்பட்டு வந்ததுடன் தமது இனவாதப்போக்கினை தொடர்ந்தும் கடைப்பிடித்தே வந்தனர். அதனது தொடர்ச்சியே தற்போதும் தொடர்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுடனான புரிந்துணர்வு என்பது தமிழ் மக்கள் தீவிரவாதிகளாகப் பார்க்கப்படுகின்ற கண்ணோட்டமாகவே இருந்து வருகின்றது. யுத்தம் நிறைவடைந்த நிலையில் சிங்கள மக்களிடையே தமிழ் மக்களுடனான உறவுகளை பலப்படுத்துவதற்கு அல்லது தமிழ் மக்கள் சம உரிமையுடன் இந்த நாட்டில் வாழ்வதற்கு உரித்தானவர்கள் என்கிற பிரச்சாரத்தை அரசாங்கம் இதுவரையிலும் மேற்கொள்ளவில்லை. மாறாக தொடர்ந்தும் இனவாத மதவாத தேசியவாத அரசியலையே அரசாங்கம் செய்து வருகின்றது.

இனப்பிரச்சினைக்கானத் தீர்வுத்திட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்குப் பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கின்றதென்ற பிரச்சாரங்களும் இடம்பெற்று வருகின்றது. ஆனால் ஜனாதிபதி அவர்கள் ஆட்சிக்கு வந்து இதுவரையிலும் தமிழ்த் தரப்புடனான பேச்சுக்களை உத்தியோகபூர்வமாகப் பேசவில்லை. அவர் தனது சுய கருத்துக்களையே பொதுவெளியிலும் பாராளுமன்றிலும் தெரிவித்து வருகின்றார். இதனொரு கட்டமாக தமிழ்த் தரப்பு ஆங்காங்கே ஒருசில ஆர்ப்பாட்டங்களை அரசுக்கு எதிராக நடாத்தி வந்தனர். அதிலும் குறிப்பாக எழுக தமிழ், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போன்ற போராட்டங்கள் அரசுக்கு எதிராக செயற்படுத்தப்பட்ட போதிலும் அரச தரப்பினரால் எதிர்ப்புக்கள், தடைகள் ஏற்படுத்தப்பட்டபோதிலும் இப்போராட்டங்கள் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதும், அப்போராட்டங்களில் எழுப்பப்பட்ட கோரிக்கைகள் அரச தரப்பினரால் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையே உள்ளது.

இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர்கள், அதனை நெறிப்படுத்தியவர்கள் தனிப்பட்ட ரீதியாக அரச புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டதும், விசாரிக்கப்பட்டதும், எச்சரிக்கப்பட்டு வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதும் என பல சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. இதில் சிவில் சமூக அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் உள்வாங்கப்பட்டனர். அரசாங்கம் ஏன் தமிழ்த் தரப்புடன் இதுவரையில் பேச்சுக்களை நடத்தவில்லை அல்லது தமிழ்த் தரப்பு ஏன் அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த முன்வரவில்லை. இதற்கான காரணத்தை பார்க்கின்ற போது, இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதனை நிரூபித்துக்காட்டுவதற்கு சனல் 4 உட்பட அனைத்துத் தரப்புக்களும் முன்வந்தபோதிலும் அவை அனைத்தும் அரசாங்கத்திற்கு சாதகமாகவே அமையப்பெற்றுள்ளது. காரணம் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை அல்ல மாறாக போர்க்குற்றமே என்பதே அரசின் நிலைப்பாடு. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் விச வாயு பாவிக்கப்படவில்லை. கொத்துக்குண்டுகள் பாவிக்கப்படவில்லை. கற்பழிப்பு, கொலை, கொள்ளை இடம்பெறவில்லை. அரசாங்கம், மனிதாபிமான செயற்பாடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றியது என்கின்ற ஒரு விம்பத்தையே இதுவரையிலும் சர்வதேச மட்டத்தில் கூறிவருகிறது. சரியான ஆதாரங்களை தமிழ்த் தரப்பு சர்வதேச மட்டத்திற்கு அல்லது ஐ.நாவுக்கு வழங்கவில்லையா என்கின்ற கேள்விகள் தற்போது எழுப்பப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறவிருக்கும் 49வது ஜெனீவா கூட்டத்தொடர் அரசாங்கத்திற்கு சாதகமானத் தன்மையை கொண்டிருப்பதாகவே அறியமுடிகின்றது. கொவிட் வைரசைக் காரணங்காட்டி தொடர்ந்து எடுக்கப்பட்ட காலக்கெடு அரசு தன்னை பலப்படுத்துவதற்கு ஏதுவான நிலைமையினையே கண்டுள்ளது. கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான கையெழுத்துவேட்டை இடம்பெற்றுவருகின்றது. இதற்கு முன்னரும் நல்லாட்சி அரசில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்துவேட்டைச் செயற்பாடுகள் அப்போதைய ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஆனாலும் எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை. அரச தரப்பைப் பொறுத்தவரை உள்ளகப் பொறிமுறையின் மூலம் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள தாம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ள நிலையில் உள்ளக பொறிமுறையின் மூலம் தமிழ் மக்களுக்கானத் தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தரப்பு எதிர்த்து வருகின்றது. இந்த சூழ்நிலையில் தான் தற்போதைய தமிழ்க் கட்சிகள் நாட்டின் பொருளாதார சூழ்நிலை கருதி கொவிட் வைரஸ் காரணமாக சில விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்படவேண்டிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

அரச தரப்புக்கு ஆதரவாக சர்வதேச நாடுகள் வைத்திருக்கின்ற பொறியில் இலங்கை அரசாங்கம் சிக்கித் தவிக்கிறது. அதுவே பொருளாதாரச் சுமை. ஆகவே தமிழ் மக்களுடனான ஒரு நட்புறவினை அரசாங்கம் ஏற்படத்தவறின் நாட்டில் தொடர் பஞ்சம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. 13வது திருத்தச்சட்டம் ஒருபுறம், மறுபுறத்தில் சர்வதேச விசாரணைகள், கொவிட் ஒழிப்பு விவகாரம், பொருளாதாரப் பிரச்சினை, பூகோள அரசியல் என இவ் அரசாங்கம் திரும்பும் திசை எல்லாம் பாரிய சுமைகளாகவே இருந்து வருகின்றது. நாடு எந்த அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றால் பால்மா, எரிபொருள், மருந்துகள் போன்ற அத்தியாவசியமானப் பொருட்கள் உட்பட வாகன மற்றும் கையடக்கத் தொலைபேசி ஏனைய பொருட்களுக்கானத் தடைவிதிப்பு, தட்டுப்பாடு, விலை உயர்வு, உற்பத்தியில் வீழ்ச்சி போன்ற விவகாரங்களினால் இலங்கையின் பொருளாதாரம் தற்போது வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் மீண்டும் இனவாத மதவாத சர்ச்சைகளை இந்நாட்டில் உருவாக்கி அதனுடன் குளிர்காய்கின்ற தரப்புக்கு தமிழ் மக்களது பிரச்சினைகளில் அக்கறையில்லை என்பதையே இவ்விடயம் எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக காணி சுவீகரிப்பு என்பது தொல்லியல் ஆராய்ச்சிகள் என்கிற போர்வையில் நடைபெறுகிறது. பூர்வீக தமிழர் பிரதேசங்களில் அரச மரமும் பௌத்த சிலைகளும் நிறுவப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலை மாற்றப்படும் வரையிலும் அரசுடனான பேச்சுக்களில் தமிழ்த் தரப்பு இணங்கிச் செயற்படுவதில்லை என்கின்ற நிலைப்பாடு இருக்கின்றது. ஆரம்பகட்டப் பிரச்சினைகளுக்கானத் தீர்வினையாவது அரசாங்கம் பெற்றுத்தரவேண்டும் என்பதே தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையாக இருக்கிறது. இவ்வாறான நிலையில் மீண்டும் தமிழ் - முஸ்லீம் - சிங்கள இனங்களுக்கிடையிலான முறுகலையும், இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைகளும் கட்டவீழ்த்துவிடப்பட்டுள்ளது. இதில் சுயலாபம் தேடுபவர்கள் காலங்காலமாகக் குளிர்காய்கின்றனர்.

நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமரைப் பொறுத்தவரையில் தீர்வொன்றிற்காக குறியாகச் செயற்படுகின்றனர். ஆனால் எதிர்க்கட்சியோ அவர்களுக்கு ஏற்றபாணியில் இவ்வரசாங்கம் எதனையும் செய்யவில்லை. மக்களை ஏமாற்றுகின்றது. பட்டினியால் மக்கள் இறக்கப்போகிறார்கள். அரசியின் விலை அதிகரித்துள்ள நிலையில் பிற நாடுகளில் இருந்து அரசியினைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த ஆட்சியினைக் கவிழ்க்கின்ற சூழ்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனரே தவிர, தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுக்கும் நோக்கில் செயற்படவில்லை.

ஜெனீவா விவகாரம் என்பது அரசாங்கத்தின் ஒரு கபட நாடகம் என்றே கூறமுடியும். ஏனென்றால் தனக்கானத் தயார்ப்படுத்தல்களை தமிழ்த் தரப்புடன் இணைந்தே அரசாங்கம் செயற்படுத்துகின்றது. இதிலும் சர்வதேசரீதியாக குரல்கொடுப்பவர்களின் குரல்கள் அரசின் உதவியுடன் நசுக்கப்படுகின்றது. தற்போது சர்வதேச ரீதியில் குரல்கொடுக்கவேண்டும் என்று செயற்பட்டு வருகின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு சேரு பூசுகின்ற நடவடிக்கைகளை அரசு தரப்பு மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறாக இருந்தால் சர்வதேச ரீதியிலான விசாரணைகள் தேவையில்லை.

உள்ளகப் பொறிமுறையின் மூலமே தமிழ் மக்களுக்கான தீர்வு என அரசு கருதுகின்றதன் மூலம், அந்த உள்ளகப் பொறிமுறைக்கான ஆரம்பக்கட்டப் பேச்சுக்களையாவது அரசு ஆரம்பிக்கவேண்டும். அதனைச் செய்யாது மற்றொரு தேர்தலை வைக்கவேண்டும் என்றும், மாகாண சபைத் தேர்தலில் தனிப்பெரும்பான்மையை நிறுவி, உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து, அதிலும் வெற்றிபெறவேண்டும் என்றும், வடகிழக்கு இணைப்பை ஏற்படுத்த முடியாது என்றும் அரசாங்கம் ஒற்றைக் காலில் நின்று செயற்பட்டு வருகின்றது. விடுதலைப்புலிகளின் போராட்டமானது பயங்கரவாதத்தை நோக்கி நகர்த்தப்படுகின்றது என்று கூறுகின்ற அரசாங்கம், கடந்த காலத்தில் சர்வதேச ரீதியாகவும் உள்ளூர் ரீதியாகவும் 14 கட்டமான பேச்சுக்கள் உத்தியோகபூர்வாக நடந்து முடிந்துள்ளது. அவர்களை பயங்கரவாதிகள் எனக்கூறி சர்வதேசத்தின் அனுகுமுறையுடன் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வந்தது இலங்கை. இவ்வாறிருக்கின்றபோது தமிழ்த் தரப்பினுடைய நிலைப்பாடுகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்ற இந்த நிலையில் சர்வதேச நாடுகள் மீண்டும் இலங்கை மீது கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன. அவர்களது பூகோள அரசியல் நிலைமை கருதி இலங்கை அரசை ஆதரித்துச்செல்கின்ற போக்கினையே இந்த நாடுகள் தற்போது கொண்டிருக்கின்றன. ஜெனீவாவின் 48வது கூட்டத்தொடர் வரையிலும் இதுவரை தமிழினத்திற்கு சார்பாக எந்தவொரு தீர்வுகளும் எட்டப்படவில்லை என்றால் இங்கிருக்கின்ற தமிழ்த்தரப்பு உரிய முறையில் சர்வதேச ரீதியாக செயற்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு சென்றுவருவதும் அறிக்கைகளை எழுதி வாசிக்கின்றார்களே தவிர நடைமுறைச் சாத்தியமான ஒரு விடயத்தினையேனும் அங்கு செயற்படுத்தவில்லை என்பதையே இதுவரையான கூட்டத்தொடர்கள் எடுத்துரைக்கின்றன. இதில் முன்னணியாக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், இன்னும் பல மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தற்போது ஜெனீவா விடயத்தில் மௌனம் காத்து வருகின்றனர்.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் தமிழினத்தைக் காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறிவிட்டது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேடை மேடையாக கருத்துக்கூறி வருகின்றார். இதனது உண்மைத்தன்மை கண்டறியப்பட்டு ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இவர்களுக்கு என்ன தொடர்பு இருந்தது என்பது பற்றியும் விரிவான அறிக்கை ஒன்றினை குறித்த கட்சி இதுவரையில் வெளியிடவில்லை என்பதும் கவலைக்கிடமே. இருந்தபோதிலும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, ஒரே நாடு இரு தேசம் என்கின்ற நிலைப்பாட்டுடன் இன்றும் இக்கட்சியின் உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

ஆகவே இந்தியாவைப் புறந்தள்ளி இலங்கைக்கான தீர்வு கிடைக்கும் என்பது சந்தேகமே. ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியா நான்காவது காலாற்படையணி வல்லரசாகத் திகழ்கின்றது. பண்டைய காலந்தொட்டு இன்றுவரை இலங்கையுடனான நட்புறவினை மேற்கொண்டு வருகின்ற இந்தியா, 2020-21 காலப்பகுதியில் இலங்கையுடனான நெருக்கமான உறவினைப் பகைத்துக்கொண்ட ஒரு சூழல் சீன அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் தேவைகளுக்கும் இந்தியாவிடம் கையேந்திய இலங்கை அரசு, இந்தியாவினது தலையீடின்றி தமிழ் மக்களுக்கான தீர்வு என இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றதன் விளைவு, இன்றைய அரசியலிலும் பொருளாதாரத்திலும் சர்வதேச ரீதியிலும் இலங்கைக்கான பின்னடைவுக்கு ஒரு காரணங்களாக அமைந்திருக்கின்றன. ஆகவே எதிர்வரும் 49வது ஜெனீவா அமர்வில் தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள தமிழ்த் தரப்பு ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயம். அவ்வாறு செயற்படுகின்ற போது தான் இலங்கை அரசாங்கம் எமக்கான ஒரு தீர்வினை பெற்றுத்தருவதற்கு உத்வேகத்துடன் செயற்படும். வெறுமனே அறிக்கைகள் மாத்திரம் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை பெற்றுத்தரப்போவதில்லை. கடந்த கூட்டத்தொடர்கள் எமக்கு கற்றுத்தந்த பாடங்கள் என்ன என்பதனை சரிபார்த்துக்கொண்டு, தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதே தமிழ் மக்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதே இன்றைய அரசியலின் உண்மை.

**நெற்றிப்பொறியன்**



# இலங்கை – இந்தியா அரசியல் சகதியில் சிக்கித் தவிக்கும் மீனவ சமூகம்

ஆசியா கண்டத்திலே மிகச் சிறிய நாடுகளில் ஒன்றாகவும் சகல வளங்களைக் கொண்டதாகவும் நான்கு பக்கமும் கடல் அன்னையால் சூழப்பட்ட ஆசியாவின் முத்து என அழைக்கப்படும் இலங்கைத் திருநாடு இனவாத மதவாத பெரும்பான்மை என்ற சித்தாத்தங்களினால் ஆட்கொள்ளப்பட்டு இனங்களை அடக்கி ஆழ நினைத்து சுமார் 30 வருட காலம் கோர யுத்த வடுக்களை சுமந்த ஓர் நாடாக காணப்பட்டது.

18ஆம் நூற்றாண்டில் ஆசியாவின் பெரும் பகுதியை பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்ட நிலையில் பல போராட்டங்கள் எதிர்ப்புகளின் பின்னர் 1947 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு சுதந்திரமளித்த பிரித்தானியா 1948ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரத்தை அளித்துச் சென்றது.

அமெரிக்கா என்னும் வல்லரசு எவ்வாறு ஐரோப்பா நாடுகளுக்கு தலைமையாக உள்ளதோ அதேபோல் இந்தியா ஆசியாவின் மிகப்பெரும் தலைமையாக உள்ளது. அத்துடன் இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள ஓர் ஜனநாயக நாடாக விளங்குகின்றது. இந்தியாவின் தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் இலங்கையின் வடகிழக்குத் தமிழர்களும் ஓர் தொப்பிள் கொடி உறவாகவே வாழ்ந்து வருகின்றார்கள். கைநீட்டி அழைக்கும் தொலைவிலேயே மன்னாரும் இராமேஸ்வரமும் உள்ளது. இலங்கை சுதந்திரத்துக்கு முன்பிருந்தே கடல் வழி வியாபாரங்களில் யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தலை மன்னார் போன்ற பிரதேசங்கள் இந்தியாவின் இராமேஸ்வரம் தனுஸ்கோடி போன்ற இடங்களுக்கு சென்று தமது வியாபாரங்களை மேற்கொண்டு வந்ததுடன் ஐக்கியமாக மீன்பிடித் தொழிலையும் மேற்கொண்டு வந்தனர்.

1970களில் தமிழ் - சிங்கள இனப்போர் ஆரம்பமான காலகட்டத்தில் தமிழ் இளையவர்கள் கடல் வழியாக இந்தியா சென்று இந்திய ஆதரவுடன் பயிற்சிகள் பெற்று இலங்கை அரசுக்கு எதிராக ஆயுத ரீதியான போராட்டத்தை ஆரம்பிக்கத் தொடங்கினர். அக்காலப்பகுதியில் கடலில் இலங்கை கடற்படையின் தாக்குதல்களில் தமிழ் நாட்டு மீனவர்களும் வடகிழக்கு மீனவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் கச்சதீவு பகுதியில் அடிக்கடி மீனவர்களுக்கிடையிலும் பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. இந்நிலையில் கச்சதீவு யாருக்கு என்ற நிலை உருவானது. கச்சதீவு உண்மையில் இந்தியாவின் எல்லையில் தான் இருந்துள்ளது.

இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினை வலுப்பெற்றதால் அப்போது இலங்கையில் பிரதமராக இருந்த சிறிமா பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பயனாக 1974 ஆம் ஆண்டு கச்சதீவை இந்தியா இலங்கைக்கு எழுத்துபூர்வமாக அளித்தது. அதன் பின்னர் மீனவர் பிரச்சினை மிக மோசமாக இடம்பெற்று கொண்டுதான் இருந்தது. இருநாட்டு மீனவர்களும் கடலில் அநியாயமாக உயிரிழந்து போயினர். இக்கால கட்டங்களில் 1980களின் பின்னர் இலங்கையின் வடகிழக்கில் யுத்தம் உக்கிரமடைந்தது. இலங்கை இராணுவத்தால் விமானத் தாக்குதல்களும் ஆட்லறித் தாக்குதல்களும் மற்றும் பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்புகளும் அதிகரித்ததுடன் தாயக மக்கள் தமது உயிரைக்காக்க கடல் வழியாக இந்தியாவின் தமிழ்நாடு நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். மிகவும் ஆபத்தான கடல் வழி பிரயாணத்தில் இலங்கை கடற்படையின் தாக்குதலில் இருந்து காப்பாற்றி எத்தனையோ எமது தாயக உறவுகளை தமிழ்நாட்டு மீனவர்கள் இராமேஸ்வரம் தனுஸ்கோடி கரைக்கு கொண்டு சென்றுவிட்டனர்.

அத்துடன் இறுக்கமான பொருளாதாரத் தடை அமுலில் இருந்த காலப்பகுதிகளில் இந்தியாவில் இருந்து கடல்வழியாக பொருட்களை கொண்டுவந்து கொடுத்து உதவினர். 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற போர்வையில் இலங்கைக்கு வந்து அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் அவர்களின் சூழ்ச்சியிலும் ஆளுமையற்ற அரசியல் முதிர்ச்சி அற்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் செயற்பாட்டாலும் இந்திய அமைதிப்படை என வந்த இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் மூண்டது.

இப்போரில் பல அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். அதில் மிகப் பெரும் படுகொலையான வல்வெட்டித்துறை படுகொலை யாழ் வைத்தியசாலை படுகொலை, கொக்குவில் பிரம்படி படுகொலை என்பன இரவோடு இரவாக இடம்பெற்ற போதிலும் தமிழ் நாட்டு மக்களாலும் தாயக உணர்வு கொண்ட தமிழக அரசியல் தலைமைகளாலும் இந்திய இராணுவத்தின் அட்டூழியம் உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியதுடன் இந்திய இராணுவத்தின் முகத்திரை கிழிக்கப்படக் காரணமானது. விடுதலைப் புலிகள் இருந்த காலகட்டங்களில் கடலில் எத்தனையோ தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையிடம் இருந்து காப்பாற்றப்பட்டனர். இவ்வாறு பரஸ்பரம் ஓர் புரிந்துணர்வுடனும் சகோதரத்துவத்துடனும் செயற்பட்ட மீனவ சமுதாயம் போர் முடிவுக்கு வந்தபின் தமது வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலில் தமக்குள்ளே அடிபடத் தொடங்கியுள்ளனர்.

ஓர் தாய் பிள்ளைகள் போலவும் தொப்புள்கொடி உறவுகள் எனப் பார்க்கப்பட்ட தமிழக தாயக மீனவர்கள் இன்று ஆக்ரோசமாக மாறி ஒருவரை ஒருவர் தாக்கி எதிரிகளாக மாறக் காரணம் என்ன? இந்நிலைக்கு காரணம் யார்?. இதில் குளிர்காயும் குள்ள நரிகள் யார்? இருநாட்டு மீனவர்களின் பிரச்சினையை அரசியல் மயமாக்கி அதில் குளிர்காய தமிழக அரசியல்வாதிகள், தாயக தமிழ் அரசியல்வாதிகள், இந்திய மத்திய அரசு இலங்கை அரசு என அனைத்தும் ஒன்றிணைந்து ஓர் நேர்கோட்டு அரசியல் சித்தாந்தத்துக்குள் இரு மீனவ சமூதாயத்தையும் சிக்கவைத்துள்ளனர்.

யுத்த காலங்களில் இருந்த சினேகபூர்வ சகோதரத்துவம், இன ஒற்றுமை மொழி ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு இன்மை என்பன பிரதான காரணமாக அமைகின்றது. அத்துடன் இருநாட்டு மீனவர்களின் பிரச்சினையை பூதாகரமாக்க இலங்கை அரசு முயல்வது தெரிகின்றது. இதில் இலங்கை அரசு மிகவும் இராஜதந்திரமாக செயல்பட்டுள்ளது. அதாவது கடற்றொழில் அமைச்சராக ஒரு தமிழரை நியமித்துவிட்டு இருநாட்டு மீனவர்களின் மோதலில் தீர்வை காண் என்றால் எவ்வாறு இதற்கு தீர்வு காண முடியும்.

அதேவேளை தமிழக உறவுகளையும் பகைக்க முடியாத இரு தலை கொள்ளி எறும்பு போல் சிக்கியுள்ளார். அடுத்து இலங்கை அரசானது எதிர்வரும் மார்ச் மாதம் வரவுள்ள ஐ.நா கூட்டத்தொடரில் தமிழக உணர்வாளர்களின் செயற்பாட்டை மீனவ பிரச்சினை காரணமாக மழுங்கடிக்கமுயல்வதுதெளிவாகதெரிகின்றது. எவ்வாறெனில் ஐ.நா கூட்டத்தொடர் நேரம் தமிழக இன உணர்வாளர்கள் எமது தாயக மக்களுக்காக குரல் கொடுத்தாலோ அல்லது இறுதி யுத்தத்தில் ஏற்பட்டது இன அழிப்பை தான் என்பதை சொல்ல முற்பட்டாலோ தமிழக மீனவர்கள் அவர்களுக்கு எதிராக கிளர்ந்தெழும்புவார்கள். எமக்கு தாயக உறவுகள் என்று சொல்பவர்களிடம் இருந்து எதுவித உதவியும் இல்லை. எம்மை சிங்கள மக்களும் கேவலமாக எண்ணுகின்றார்கள்.

இந்நிலையில் அவர்களுக்காக ஐ.நாவில் நீங்கள் குரல் கொடுப்பது சரியா என பிரச்சினை எழும். ஆகவே இது இலங்கை அரசுக்கு சாதகமாக அமையும். பற்றி எரியும் நெருப்பில் பெற்றோலை ஊற்றுவது போல் தமிழக மீனவர்களின் படகுகள் ஏலமிடப்பட்டு சுமார் 135 படகுகள் 53 இலட்சத்துக்கு மேல் விற்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது தனியே தமிழக மீனவர்கள் சார்பானதாக எழுதப்படவில்லை. எமது மீனவர்கள் இருவர் அநியாயமாக உயிர் இழந்துள்ளனர். எமது தாயக மீனவர்களின் வாழ்வாதாரம் இழக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே. கடலையே நம்பி வாழும் எம் தாயக மீனவ சமூகம் இன்று கையேந்து நிலைக்கு வந்துள்ளது.

கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பதவியேற்கும் பொழுது மீனவர்களின் பிரச்சினைக்கு முடிந்தளவு முற்றுப்புள்ளி வைப்பேன் என கூறி பதவியேற்றார். ஆனால் மீனவர்களின் பிரச்சினை வரும்பொழுது தீர்க்க முடியாமல் கையறு நிலையில் உள்ள பதவியை வைத்துக்கொண்டு பாராளுமன்றம் சென்று வருகின்றார்.

தமிழ்த் தேசியம் எனக் குரல் கொடுத்து பாடும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் எத்தனையோ தடைவை இந்தியா வெளியுறவு அமைச்சர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் என அனைவரையும் சந்தித்து ஒரு நன்மையும் ஏற்படவில்லை. தாயக மீனவர்களுக்காக குரல் கொடுத்தால் தமிழ்நாடு மற்றும் இந்தியா பகைக்குமா, 13ம் திருத்தச் சட்டத்துக்கு கடிதம் எழுதி அனுப்பி உள்ளோம். இந்நிலையில் மீனவர்கள் பிரச்சினையை எடுத்தால் சிக்கல் வரும் என அனைவரும் மௌனம் காத்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் தமிழக முதல்வர் இங்கு தமிழக மீனவர்களின் படகு ஏலமிட இருப்பதாக அறிந்து உடனே நிறுத்துமாறு இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பினார். அதற்குப் பதில் இல்லை. ஆக்கபூர்வமான முடிவும் இல்லை. இந்நிலையில் 07.02.2022 அன்று இந்திய மீனவர்களின் படகுகள் காரைநகரில் ஏலமிடப்பட்டுக்கொண்டிருக்கும் அதேதினத்தில் திரும்பவும் மோடிக்கு கடிதம் எழுதியதாக அன்றைய தினம் தமிழக தொலைக்காட்சிகளில் விசேட செய்திகள் ஒளிபரப்பப்பட்டது.

ஆகவே தமிழக மீனவர் பிரச்சினையில் தமிழக அரசு கூட காத்திரமான முறையில் எதுவும் செய்யவில்லை என்பதுடன் இப்பிரச்சினையானது மத்திய அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இடம்பெறுவதுபோல் தோன்றுகின்றது அல்லது தமிழக அரசின் கையறு நிலை தெளிவாகத் தெரிகின்றது. இவ் மீனவ சமுதாயத்தின் பிரச்சினைக்கானத் தீர்வினைக் காண எவரும் முன்வரவில்லை எனத் தெரிவதுடன் அல்லது இது ஓர் பிரச்சினையாகத் தோன்றவில்லையோ அல்லது இது ஓர் அரசியல் சூழ்ச்சியோ என மீனவ சமுதாயம் கேள்வி எழுப்புகின்றது. மீனவர் பிரச்சினை தோன்றும் போதெல்லாம் கச்சதீவை திரும்ப மீட்டுத் தா என தமிழக மீனவர்கள் கோருவதும் தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி வந்தால் விரட்டுவோம் அல்லது வலைகளை அறுப்போம் எனக் கோருவதும் இனியும் தொடராமல் இருக்க மீனவ சமூகங்கள் ஓர் அணியில் இணைந்து பேச்சுவார்த்தைகள் ஊடாக 12 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சமூக ஒற்றுமை, இன ஒற்றுமை மொழியால் இணைந்த ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு என பேசி, அரசியல்வாதிகளின் மாயாஜால வாக்குறுதிகளை தூக்கி எறிந்துவிட்டு ஓர் உடன்பாட்டுக்கு இருநாட்டு மீனவ சமுதாயமும் வரவேண்டும் என்பதுடன் இனிமேலும் இவ்வாறான அநியாயமான உயிரிழப்புக்கள் பொருள் இழப்புக்கள் ஏற்படாதவண்ணம் ஒற்றுமையாக கைகோர்த்து செயற்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

**தாயகத்தான்**

# மூன்றாம் உலக யுத்தத்தை நோக்கி நகரும் ரஸ்யா, சீனா?

1945 ஆம் ஆண்டில் யப்பான் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டு அழிவுடனும், சர்வாதிகாரி ஹிட்லர் மறைவுடனும் முடிந்துபோன இரண்டாம் உலக யுத்தம் எண்ணிலடங்கா உயிர்களை காவு கொண்டதுடன் பலகோடி சொத்துக்களை நாசமாக்கியதுடன் அணுவீச்சின் தாக்கம் இன்றளவும் யப்பானின் ஹிரோசிமா மற்றும் நாகசாகி ஆகிய இடங்களில் உணரப்படுகின்றது. மீண்டும் இது போன்ற உலக யுத்தங்கள் ஏற்படக்கூடாது என ஐ.நா சபை உருவாக்கப்பட்டது. பல உலக வல்லரசுகள் ஒப்பந்தங்கள் மூலம் யுத்தத்துக்கு அடி எடுத்து வைப்பதில்லை என முடிவெடுத்த நிலையில் 2015க்குப் பின்னர் மூன்றாம் உலக யுத்தத்துக்கான மேகக் கூட்டங்கள் உலக நாடுகளில் கூடத் தொடங்கியுள்ளது. ஊடகங்களும் உலக யுத்தம் இப்பொழுது வரப்போகின்றது வரும் ஆண்டு வரப்போகின்றது என பெரும் அக்கப்போராக செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.



2017 அளவில் உண்மையில் ஓர் மிகப்பெரிய யுத்தம் தோன்றுவதற்கான அனைத்து அறிகுறிகளும் தென்பட்டது என்பது உண்மையே. வடகொரியா, தென்கொரியா, சீனா, தாய்வான், அமெரிக்கா, ஈரான் என கொதி நிலை காணப்பட்டது. இந்நிலையில் தான் உலக நாடுகளை கொவிட் வைரஸ் என் யுத்தம் மூழ்கடித்தது. உலக வல்லரசுகள் முதல் கொண்டு மிகச் சிறிய தேசங்கள் வரை அல்லோலகல்லோலப்படும் நிலை உருவாகியது. இதனால் உலக யுத்தம் என்ற கதை சற்று தள்ளிப்போனது அல்லது அது பற்றி சிந்திக்க முடியாமல் போனது. 2018க்குப் பின்னர் உலக வல்லரசுகளுக்கிடையில் தலைவர்கள் மாற்றம் ஏற்பட்டது. அமெரிக்காவில் ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவானார். அதேபோன்று இஸ்ரேலிலும் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. தணிந்து இருந்த போர் மேகச் சூழல் தற்பொழுது மீளவும் கருக்கட்டத் தொடங்கியுள்ளது. முதலில் சீனா, தைவான் நிலவரத்தை சற்று கவனிப்போமானால் தைவான் எப்பொழுதும் சீனாவின் ஓர் மாகாணமாகவே சீனா கருதுகின்றது. எப்படியாயினும் தைவானை சீனா தனது நாட்டுடன் இணைக்க முயற்சிக்கின்றது. உலகில் தொழில்நுட்பங்களில் சிறந்து விளங்கும் நாடுகள் வரிசையில் யப்பான், சீனா, அமெரிக்கா அடுத்தபடியாக தைவான் உள்ளது. தைவான் நாட்டை எப்படியாவது தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சீனா முயற்சிக்கின்றது.

ஆனால் தைவானுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது அத்துடன் இந்தியாவும் உள்ளது. தென்கொரியாவும் தைவானுக்கு ஆதரவாகவே உள்ளது. இந்நிலையில் சீனா, தைவானைக் கைப்பற்ற முயற்சித்தால் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், தென்கொரியா, இந்தியா போன்ற நாடுகள் சீனாவை எதிர்க்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அதேவேளை சீனாவுக்கு ஆதரவாக வடகொரியா, ரஸ்யா, ஈரான், பாகிஸ்தான் ஏன் இலங்கை கூட ஆதரவாக இருக்கும். இது ஓர் மிகப்பெரும் உலக யுத்தமாக மாற காரணமாக அமையும். தற்பொழுது உள்ள இராணுவ வலிமையில் அமெரிக்காவும் சீனாவும் சமநிலையில் காணப்படுகின்றன. அத்துடன் பொருளாதார நிலையில் அமெரிக்காவை விட சீனா பலம் பொருந்திக் காணப்படுகின்றது. கடந்த 3 ஆண்டு காலமாக இடம்பெற்றுவரும் கொரோனா தாக்கத்தால் அமெரிக்கா உட்பட பல வல்லரசு நாடுகள் பொருளாதார நிலையிலும் வேலையில்லாப் பிரச்சினையாலும் சிக்கித்திணறி வருகின்றன. சீனாவைப் பொறுத்தவரையில் கொரோனா தோன்றக் காரணமான நாடாகப் பார்க்கப்பட்டபோதிலும் உடனடியாக கொரோனா வைரசைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் உயிரிழப்புக்களையும் குறைத்தது. அங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைத்துக்கொண்டது. அத்துடன் பொருளாதார நெருக்கடியில் சிக்காமல் தன்னைப் பார்த்துக்கொண்டது. ஆகவே இப்பொழுது ஓர் போர் மூளுமாயின் எல்லோரும் கூறுவதுபோல் அமெரிக்காவை ஒன்றும் செய்ய முடியாது என மார்தட்டி நிற்க முடியாது. பொருளாதார நெருக்கடி ஒருபுறம் வேலையில்லாப் பிரச்சினை மறுபுறம். ஆயுதபலம் பொருந்திய சீனா, வடகொரியா என இரு ஆயுத தாரிகளிடம் மோதுவது என்பது சற்று கடினமான விடயமே. இந்நிலையில் தற்பொழுது சீனாவின் நிலைப்பாடானது போரை மேற்கொள்வது. இராஜதந்திர ரீதியாக தைவானைப் பலவீனப்படுத்தி தன்னுடன் மல்லுக்கட்டும் நாடுகளை தனது பொருளாதாரத் திறமையால் தனது கைக்குள் வீழ்த்தி அந்நாடுகளை நிலைகுலையவைத்து தனது சொற்படி நடக்கச் செய்து சூழ்ச்சி மூலம் தைவானை வீழ்த்த முயற்சிக்கின்றது என அண்மைய செயல்பாடுகளின் மூலம் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது சீனா.

இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானுக்கு ஆயுத விநியோகம், இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள இலங்கையில் 60% நிலத்தை சீனாவின் குத்தகைக்குள் வந்துள்ளது. பெரும் பொருளாதார தடை அமுலான வடகொரியாவுக்கு பலவழிகளில் உதவி, அத்துடன் ரஸ்யாவுக்கு அமெரிக்காவின் பொருளாதாரத்தடையை மீறி உதவி, அத்துடன் கொரோனா வைரசால் பொருளாதாரத்தில் திணறிவரும் நாடுகள் அனைத்துக்கும் சீனா பண பொருள் உதவிகள் என அனைத்து நாடுகளையும் தனது காலடியின் அடிமையாக்க முயற்சிக்கின்றது. அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது.

இனி யுத்தத்தின் விளிம்பில் நிற்கும் ரஸ்யா, உக்ரைன் நிலமையை சற்று கவனிப்போம். சீனா, தைவான் போல் அல்ல ரஸ்யா - உக்ரைன் பிரச்சினை. 1990 வரை சோவியத் யூனியனாக மிகப்பலம் பொருந்திய கட்டமைப்பான உக்ரைன், கஸகஸ்தான், தஜிகிஸ்தான் என 16 நாடுகள் ஒருங்கிணைந்த ஓர் பாரிய தேசமாக விளங்கிய சோவியத் யூனியன். 1990க்குப் பின்னர் அமெரிக்காவின் சூழ்ச்சியாலும் சோவியத் யூனியனின் இறுதி ஜனாதிபதியாக இருந்த கோர்ப்பச்சேர்வ் பின்னர் வந்த ஆளுமையற்ற ஜனாதிபதியால் பல நாடுகளாக சிதறுண்டு உடைந்து போனது. உலகின் மிகப்பெரிய தலைவர்களாக போற்றப்படும் சோவியத் சித்தாந்தத்தின் தந்தையென போற்றப்படும் லெனின், ஸ்டாலின் போன்ற தலைவர்கள் கட்டிக்காத்து உருவாக்கிய சோவியத் யூனியன் இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு கொண்டுவர ஹிட்லரின் நாசி கூட்டுப்படைகளை சோவியத் யூனியனுக்கு சமாதி ஆக்கி ஹிட்லரை படுதோல்வி அடைய அன்று உதவிய சோவியத் என்ற நாடு உடைக்கப்பட்டு சிதைக்கப்பட்டது. தற்பொழுது ரஸ்யாவுக்கு அருகில் உள்ளது. மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்டதுமான சுமார் 4 கோடி மக்கள் வாழும் உக்ரைனை தனது நாட்டுன் இணைக்க ரஸ்யா முயற்சிக்கின்றது.

உலகில் உலங்கு வானூர்திகளை அதிகளவில் தயாரிக்கும் நாடு. அத்துடன் பல்வேறு நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்வதுடன் பல்வேறு வளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இதுவெல்லாம் ரஸ்யா உக்ரைனை மீட்கக் காரணமாக அமையவில்லை. உண்மையில் உக்ரைன் நாடு நேட்டோ நாடுகள் பட்டியலில் இணைய இருப்பது தான் தற்பொழுது ரஸ்யாவுக்கு உள்ள பிரச்சினையாகும். ஏற்கனவே ரஸ்யா உக்ரைன் போன்று தன்னிடம் இருந்து பிரிந்த நாடான கிரிமியாவை தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டுள்ளது. கிரிமியாவில் 75% மக்கள் ரஸ்யர்கள். ஆகையால் பிரச்சினை இல்லாமல் கிரிமியாவை மீட்டுக் கொண்டது. ஆனால் உக்ரைன் கதையோ வேறு. அங்கு ரஸ்யாவை விரும்பாத சுமார் 60% மக்கள் உள்ளனர். அத்துடன் மேற்கு ஐரோப்பிய மோகம் கொண்ட மக்கள் அங்கு அதிகம் வசிக்கின்றனர். உக்ரைன் நேட்டோ நாடுகள் பட்டியலில் இணைந்தால் அது ரஸ்யாவுக்கு ஆபத்தாக அமையும். ஏவ்வாறெனில் நேட்டோ படை கருவிகள் உக்ரைனில் வைத்து ரஸ்யாவை தாக்கக்கூடும். ஏவுகணைகள் நேட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி உக்ரைனில் பூட்டக்கூடும். இது ரஸ்யாவுக்கு மிகப்பெரிய ஆபத்தாக அமையும். அத்துடன் உக்ரைன் ஊடாக வேவு நடவடிக்கை அதிகரிக்கக்கூடும். இது ரஸ்யா உக்ரைன் மீது போர்தொடுக்க காரணமாக உள்ளது.

இதேபோன்ற ஓர் நிலை பின்லாந்து பிரிந்த போது ஏற்பட்டது. ஆனால் பின்லாந்து ஆனது நேட்டோவில் இணையவும் இல்லை. அத்துடன் ரஸ்யா எதிர்ப்பு நாடுகளுடன் கூட்டு சேரவும் இல்லை. பின்லாந்து தனித்து நடு நிலையாக செயல்படுவதுடன் ரஸ்யாவுக்கு தலையீடு இல்லாமல் உள்ளது. இதேபோல் பின்லாந்து வயப்பட்டது போல் உக்ரைன் செயல்பட்டால் பிரச்சினை இல்லை. உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைய மாட்டேன் என உறுதி அழித்தால் ஏற்பட இருக்கும் மிகப்பெரும் போர் ஏற்பட வாய்ப்பில்லாமல் போகும். அதேவேளை போர் ஏற்பட்டால் அது மிகப்பெரும் சன நெருக்கடியை ஏற்படுத்தும் மேற்கு ஐரோப்பிய மோகத்தில் உள்ள உக்ரைனிய மக்கள் போர் ஏற்பட்டால் அதைக் காரணங்காட்டி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் துங்சமடைய நேரிடும். இது மிகப்பெரும் அகதிச் சுமையாக மாறும். ரஸ்யாவும் யுத்தம் ஏற்படின் மிகக் குறுகிய காலத்துக்குள் முடிக்கப் பார்க்கும். உலகின் மிகப்பெரிய கவச படையணியை கொண்ட நாடு ரஸ்யா. ஆகவே அதனைப் பயன்படுத்தி மிக வேகமாக உக்ரைனைக் கைப்பற்றும் என்பதில் சந்தேகமில்லை.

அத்துடன் அமெரிக்காவின் நீண்ட பொருளாதாரத் தடையை சமாளிக்க ரஸ்யாவால் முடியாது. அதுமட்டுமன்றி அதனுடைய மேற்கு ஐரோப்பாவிற்கான வர்த்தக நடவடிக்கையான இயற்கை எரிவாயு விநியோகம் தடைப்படும். எனவே ரஸ்யாவும் உடனடியாக யுத்தத்தில் ஈடுபட முடியாது எனத் தோன்றுகின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளும் யுத்தத்தால் ஏற்படும் அகதிச் சுமையை தாங்க முடியாது. எனவே பேச்சுவார்த்தை ஊடாக உக்ரைன் நேட்டா அமைப்பில் இணைவது இல்லை என உறுதி மொழியளித்து ரஸ்யாவுக்கு பாதகமாக செயல்படுவதில்லை என ஒப்பந்தம் கைச்சாத்திட்டால் ஏற்பட இருக்கும் பெரும் யுத்தம் இல்லாமல் போகும். மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிந்திக்குமா?. உலகம் மீண்டும் ஓர் உலக அழிவைத் தடுக்க முயலுமா?. உக்ரைன் பின்லாந்து நாடு போல் ரஸ்யாவின் இறைமையில் பாதகம் ஏற்படாத வண்ணம் நடக்குமாயின் அழிவு ஏற்படாது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் வல்லரசுகள் 1945க்குப் பின்னர் தங்கள் பலத்தை பரிசோதித்து பார்ப்போம் என முடிவெடுத்தால் உலக யுத்தம் தோன்றுவதை யாராலும் தடுக்க முடியாது.

**தமிழ் கிறுக்கன்**

# தி/ஸ்ரீ சண்முக இந்து மகளீர் கல்லூரி நடந்தது என்ன?



**சண்முகவித்தியாலயம் ஏன் எப்படி உருவானது?**

தங்கம்மாள் என்ற பெண்மணி 1923ம் ஆண்டு தன் காலம்சென்ற கணவரின் பெயரில் திருகோணமலையில் சைவ பெண்களுக்கு என்று ஒரு பாடசாலை இல்லாத காலத்தில், அந்த சைவப் பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனது சொத்துக்களை தானமாக கொடுத்து அமைத்த பாடசாலையே இன்றைய ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியாகும்.

திருகோணமலை நகரத்தில் உள்ள அந்தக் கல்லூரியும் இலங்கையில் இருக்கும் எல்லா பாடசாலைகளும் விதி அமைத்து உள்ளது போல் அந்த பாடசாலையும் விதி அமைத்து இயங்கி வருகின்றது அதில் ஒரு விதியே ஆசிரியைகள் சேலை அணிவதுவாகும்

அத்தோடு அந்த பாடசாலை விதிகளில் ஒன்றாக கதியற்றவர்களுக்கு கல்வி அறிவூட்டுவதை கொள்கை ஆக்கி இஸ்லாமிய பெண்களுக்கு அவர்களது சமூகத்தினாலேயே கல்வி மறுக்கப்பட்ட அன்றைய கால கட்டத்திலேயே மத பேதம் அற்று அந்த சகோதர இனத்தை அரவணைத்து கல்வி கற்க வழிசமைத்த பாடசாலை என்பதும் நிதர்சனமானது.

இவற்றுக்கெல்லாம் மேலாய் அந்த பாடசாலையில் அதிகாலை கடவுள் வணக்கம் இடம் பெறும் பொழுது அங்கு பயிலும் மாணவிகளும் அவர்களுக்கு கற்பிற்கும் ஆசிரியர்களும் அவரவர் மதம் சார்ந்த வழிபாடுகளை தனித்தனியாக எவ்வித இன மத முரண்பாடுகளும் இன்றி நடத்தி முடிப்பது மத ஒருமைப்பாட்டின் உச்சம் என்பதோடு, இதனை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இலங்கையர் நாம் என உணர்ந்து பெருமைப்படக் கூடிய விடயத்தில் ஒன்றாகும்.

இதனை உணர்ந்து தமிழர்களோடு ஒன்றாக இருந்த இஸ்லாமிய சமூகத்தை சார்ந்த அனைவரும் தம் தலையை மறைத்து ஆடை அணிந்து பாடசாலைக்கு வந்தார்களே என்றாலும் பொங்கல் வாணி விழா என்ற சரஸ்வதி பூஜை மற்றும் பாடசாலை கோவில் திருவிழா என எம்மோடு ஒன்றாய் நின்றார்கள்.

இப்படி தமிழர்களோடு ஒட்டி தமிழ் கலாச்சாரத்தில் ஒன்றி வாழ்ந்தவரே இன்று சமூகவலைத்தளம் பேசும் அளவிற்கு தரம் உயர்ந்து போய் இருக்கும் இந்த பாத்திமா பஹ்மிதா ஆசிரியையாவார்.

**யார் இந்த பாத்திமா பஹ்மிதா (ஹபாயா டீச்சர்):**

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கற்பித்து வந்த பாத்திமா பஹ்மிதா ஆசிரியை பாடசாலையில் அனைத்து ஆசிரியர்களுடனும் மிகவும் அன்பாக,நெருங்கிய நட்பினைப் பேணிய ஓர் இஸ்லாமிய ஆசிரியை என்பதோடு,

ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இவர் கற்பித்த காலத்தில் பாடசாலையில் இடம்பெறும் இந்து சமய விழாக்களில் தமிழ் சைவ ஆசிரியர்களுடன் சேர்ந்து வாணி விழா தொடங்கி அனைத்து விழாக்களிலும் தானும் மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் மனம் ஒத்து கடமையாற்றிய ஆசிரியையாக இருந்தார்.

கோலம் போடுவது தொடக்கம் ஐயர் வந்து பூஜைகள் சமய சடங்குகள் செய்து முடிக்கும் வரை அனைத்திலும் பங்கேற்றதோடு, ஆசிரியர்களுக்கான கூடைப்பந்து(netball), கயிறிழுத்தல் போட்டி என அனைத்திலும் பங்கேற்ற ஓர் ஆசிரியையாக இருந்ததோடு, தான் பணியாற்றிய ஐந்தாண்டுகளாக பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடையான சேலை அணிந்து அதற்கு ஏற்ற நிறத்தில் ஹிஜாப் அணிந்து பாடசாலைக்கு கடமைக்குச் சென்று வந்த வராவார் இந்த பாத்திமா பஹ்மிதா ஆசிரியை.

22.04.2018 முதல் திடீரென ஹபாயாவுடன் பாடசாலைக்கு சென்றார் என்பதே இன்று உருவெடுத்துள்ள சர்ச்சைக்கான முதன்மை காரணமாகும்.

**இதன் பின்னணி என்ன?**

இவரது மௌலவி கணவரது தூண்டுதலினாலும் வேறு பல அரசியல் கட்சிகளின் அரவணைப்புகளினாலும் மற்றும் அடிப்படைவாத இஸ்லாமிய சிந்தனையினாலும் ஆடை விவாகாரத்தை பூதாகரமான பிரச்சனையாக்கி ஆடையை வைத்து அரசியல் செய்கிறார்.

22.04.2018 அன்று அங்கே அந்த ஆடைக்கு அனுமதி இல்லை என்று கல்லூரி நிர்வாகம் கூறிய போது அதிபர் திருமதி.சுலோசனா ஜெயபாலன் அவர்களை பாடசாலை வளாகத்துக்குள் அமைந்திருந்த அதிபர் குடியிருப்பில் அன்றைய மாலை வேளையில், தன் கணவர் மற்றும் சக இஸ்லாமிய ஆசிரியை ஷஜானா பாணு மற்றும் அவரது கணவர், இன்னுமொரு ஆசிரியையான ஷிவானா ஆகியோருடன் சென்று சந்தித்து, இந்த ஆடை மாற்றம் தொடர்பாக விவாதித்து வாதித்து தூஷித்து மிரட்டி அவரை எச்சரித்துவிட்டு சென்ற இவர்கள் தமது தவறுகளை மறைத்து ஒட்டு மொத்த இஸ்லாமிய சமூகத்தினரையும் மதத்தின் பெயரால் தூண்டிவிட்டு வாழ்ந்தார்கள் என்றாலும் இலங்கையில் நடந்த இஸ்லாமிய தீவிரவாத குண்டுத்தாக்குதலின் பின்னர் சற்று மௌனம் காத்து இத்தனை ஆண்டுகளாக ஓய்ந்திருந்த பிரச்சனைக்கு மீண்டும் தூபம் இடுகின்றார்கள்.

அன்பிற்குரிய தமிழ் மூஸ்லீம் உறவுகளே இவர்களின் அரசியல் சதியில் நீங்கள் அகப்பட்டு கொள்ளாதீர்கள். இந்த பாடசாலை விவகாரம் தாண்டி கிழக்கு மாகாணத்தில் தமிழ் இஸ்லாமிய உறவும் ஒற்றுமையும் மட்டுமே எம்மையும் எமது இருப்பையும் இலங்கையில் நிலை நிறுத்தும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் 200 இஸ்லாமியப் பிள்ளைகள் கற்கின்றார்கள் என்பதோடு 11 இஸ்லாமிய ஆசிரியர்கள் ஆண் ஆசிரியர்கள் உட்பட கற்பிக்கின்றார்கள் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.

இவர்கள் இந்தப்பாடசாலை சார்ந்த சமூகத்தினால் வெறுக்கப்படவில்லை என்பதோடு இவர்களை எவரும் இனவாதம், மதவாதம் பேசி புறக்கணிக்கவில்லை என்பதும் யதார்த்தமாகும்.

ஆனால் அந்த அடாவடித்தனம் செய்யும் இந்த ஒரு ஆசிரியரை மட்டுமே இந்த பாடசாலைச் சமூகம் வெறுக்கின்றது என்பதோடு அதற்கான காரணமும் தெளிவாக கூறப்படுகின்றது.

இந்த ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றில் எத்தனை ஆயிரம் இஸ்லாமிய மாணவிகள் கற்றார்கள் என்பதும் எத்தனை நூறு ஆசிரியர்கள் கற்பித்தார்கள் என்பதையும் ஆழ்ந்து சிந்தியுங்கள்.

அவரவர்கள் கலாச்சாரம் மதம் சார்ந்த விடயங்களை அவர்கள் தத்தமது இடங்களில் வைத்திருப்பதே நியாயமாகும்.

அந்தக் கலாச்சார விஷயங்களை மற்ற மதத்தவர் இடங்களில் வந்து நடை முறைப்படுத்துவது வீம்பாகும்.

**1. இந்த வீம்பிற்கு முண்டு கொடுப்பது யார்?**

**2. 2000 மாணவர்கள் வெறுக்கும் ஒரு ஆசிரியரை பாடசாலையில் திணிக்க நினைப்பது ஏன்?**

**3. பிரச்சினையைக் காரணங் காட்டி இன முறுகலைக் கோற்றுவிக்கும் இவர்களின் நோக்கம் என்ன?**

**4. அத்துமீறி வீடியோ,போட்டோ எடுத்து பிரச்சனையை பூதாகரமாக உருவாக்கி, தான் கொடூரமாகத் தாக்கப்பட்டதாக நாடகமாடிக்கொண்டு சமூகங்களுக்குள் துவேசங்களை பரப்பும் நோக்கில் ஒலி,ஒளிப்பதிவுகளை பதிவதன் நோக்கமென்ன?**

**5. மருத்துவமனை அறிக்கையின் படி உள்காயமோ,வெளிக்காயமோ எதுவுமே இல்லையென்று வீட்டிற்குச் செல்லுமாறு பணித்தும் அடம்பிடித்து அங்கு தனது உறவினர் வைத்தியர் அம்மையாரின் சலுகையில் தங்கி இருப்பது ஏன்?**

என்ற என் கேள்விகளை உள்வாங்கி நியாயத்தின் பக்கம் நின்று பேசவேண்டியதே இரு சமூகங்களின் கடமையாகும் என்பதை கூறிக்கொண்டு,

ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் வைத்தியசாலையில் செல்லும் அளவிற்கு இந்த 2022ல் நடந்தது பின்னணியின் சுருக்கத்தை தருகின்றேன்.

கடந்த 22.04.2018 ல் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஹபாயா அணிந்து சென்றதன் காரணமாக மாணவிகள் நடத்திய போராட்டத்தினால் நான்கு ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதன் காரணமாக மாணவிகள் மீது கோபம் கொண்ட அடிப்படை வாத இஸ்லாமிய சமூகத்தினரால் ஒரு விழாவில் பங்கேற்க சென்ற மாணவிகள் தாக்குதலுக்கு உட்பட முனைந்த போது சிங்கள ஓட்டுனரால் காப்பாற்றப்பட்டு அழைத்து வரப்பட்டதை திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் பலரும் அறிவார்கள்.

அத்தோடு ஹபாயா பிரச்சனைக்கு ஏதாக போராடிய ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் சிலரின் படங்களை ஆபாசமாக சில இஸ்லாமிய அடிப்படைவாத மூஸ்லீம்கள் செய்ததும் சாட்சி ஆவணமாக கல்லூரியில் இருக்கின்றது என்பதும் பலரும் அறிந்ததே.

இந்த சூழ்நிலையில் நான்கு ஆசிரியர்களில் ஒருவரான ஆசிரியை பாத்திமா பஹ்மிதா நீதிமன்றத்தில் தீர்ப்பு வருவதற்கு முன்னரே புரிந்துணர்வின் அடிப்படையில், மீண்டும் ஹபாயா அணிந்து பாடசாலைக்கு கடமை ஏற்க சென்றுள்ளார்.

இதனை அறிந்த பாடசாலை மாணவிகளின் பெற்றோர்கள் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் குழுமி உள்ளனர் . இதன் காரணமாக சற்று யோசித்து முடிவெடுக்க பாடசாலைஅதிபர் அவரை தன் அலுவலகத்திற்கு முன் உள்ள வெளிவிராந்தையில் காத்திருக்க பணித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் மாணவிகள் வெளியே வரத்தொடங்கவும் ஆசிரியை பாத்திமா பஹ்மிதா தனது கையடக்க தொலைபேசியால் அவர்களை படம் எடுத்துள்ளார்.

இதனால் பெற்றோர்களும் மாணவிகளும் விசனமடைய, நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பாடசாலை அதிபர் அந்த படங்களை அழிக்கும் படி ஆசிரியை பாத்திமா பஹ்மிதாவை பணித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த ஆசிரியை பாத்திமா பஹ்மிதா வயோதிப அதிபரை கீழே தள்ளி விழுத்திவிட்டு தான் முதலில் வைத்தியசாலை சென்று, தான் பலரால் தாக்கப்பட்டதாக கூறி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய சாலையில் கிடைத்த தகவலின்படி இவருக்கு நகக்கீறல் கூட இல்லை என்ற அறிக்கையின் பின்னரும் தனது உறவினரின் செல்வாக்கில் தங்கி இருந்து மிக மெல்லிய குரலில் இரு இனங்களுக்கு இடையே மதவாதத்தை தூண்டும் வகையில் சமூகவலைத்தளங்களில் பேசிவருகின்றார்.

ஆசிரியை பாத்திமா பஹ்மிதா கூறுவது போல் இவர் வெளியாட்கள் பலரால் தாக்கப்பட்டால் தாக்கப்பட்ட ஒருவர் எப்படியாகி இருப்பார் என்ற உண்மைத்தன்மையின் யதார்த்தம் அறிந்து தமிழ் முஸ்லீம் சமூகங்களின் ஒற்றுமையின் தேவையை உணர்ந்து பக்கசார்பாக குரல் உயர்த்துவதை உடன் நிறுத்துங்கள்.

**அன்பு இஸ்லாமிய உறவுகளே!**

சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் எவரும் இஸ்லாமிய கலாச்சாரத்துக்கு எதிரானவர்கள் அல்ல சேலை அணிந்து அதற்கு தலை முடியை மறைத்து ஹிஜாப் அணிந்து வருவதற்கு எவரும் தடை விதிக்கவில்லை ஆனால் ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரியில் ஹபாயா ஏற்கப்படவில்லை என்ற நிர்வாக சட்டதிட்டங்களை மதிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

இதனை விட ஒரு ஆசிரியை ஹபாயா அணிந்து வருவது அங்கு கல்வி கற்கும் மாணவிகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் பிடிக்கவில்லை என்றால் ஆசிரியை பாத்திமா பஹ்மிதா அவர்கள் ஹபாயா அணிந்து செல்லக்கூடிய பாடசாலைக்கு செல்வதே சாலச்சிறந்தது என்ற யதார்த்தத்தை உணர்ந்து திருகோணமலை வாழ் தமிழ் முஸ்லீம் மக்கள் ஒற்றுமைக்காக ஆவன செய்யுங்கள்.

**சுவாமி சங்கரானந்தா**





# பிராந்திய செய்திகள்



## சதொச விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர் மீது தாக்குதல்

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய சென்றவர் மீது அங்கு கடமையில் இருந்த உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத்திற்கு பொருளை கொள்வனவு செய்ய சென்ற வாடிக்கையாளரொருவர் அங்குள்ள பொருட்களின் விலைகள் தொடர்பில் கடமையில் இருந்த ஊழியரிடம் கேட்டுள்ளார்.

இதன்போது ஊழியருக்கும் வாடிக்கையாளருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் ஊழியர் வாடிக்கையாளர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக வாடிக்கையாரின் கால் பகுதியில் காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இந்நிலையில் வவுனியா பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ் விடயம் தொடர்பில் சதொச முகாமையாளாரிடம் எமது பிராந்திய செய்தியாளர் வினவியபோது, தாம் மேலிடத்து உத்திரவின்றி கருத்து கூறமுடியாது என தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தினரால் கிளிநொச்சியில் சமூகப் பணிகள்...

*மனிதாபிமானமுள்ள இராணுவத்தினால் கண்ணன் தேவாலய வளாகத்தில் சனிக்கிழமை (05) கிளிநொச்சியை சேர்ந்த 42 வறிய குடும்பங்களுக்கு பிரதேசத்திலுள்ள நன்கொடையாளர்களின் உதவியுடன் உலர் உணவு பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.*

*இத்திட்டமானது முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி சஞ்சய வணசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய 57 வது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த ஜயவர்தன அவர்களின் வழிகாட்டலின் கீழ்571,572மற்றும்573வதுபிரிகேடின் சிப்பாய்களால் முன்னெடுக்கப்பட்டது. காரைநகர் மற்றும் இளமந்தலாறு மற்றும் பணிக்குளம் கிராம உத்தியோகத்தர்களின் ஆலோசனையுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் குழந்தைகளுடன் வாழும் வறிய குடும்பங்களுக்கான நிவாரண பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.*

*பகிர்ந்தளிக்கப்பட்ட உலர் நிவாரண பொதிகளில் அரிசி, பருப்பு, நெத்தலி, பால்மா, காரப் பொருட்கள், மசாலாப் பொருட்கள், ஊட்டச்சத்துள்ள உணவுகள், பொதி செய்யப்பட்ட உணவுகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகவும் ஒவ்வொரு பொதியும் 2750/= பெறுமதியானதாகவும் காணப்பட்டது. இராணுவத்தின் சமூக பணிகளை பாராட்டும் விதமாக நன்கொடையாளர்கள் இத்திட்டத்திற்கு நன்கொடைகளை வழங்க முன்வந்திருந்தனர்.*

*இந்நிகழ்வில் 57 வது படைப்பிரிவு தளபதியின் சார்பில் 9 வது இலங்கை சிங்கப் படையணியின் மேஜர் சீஎம்ஜீஎன்எஸ் சமரசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்ததோடு, ஏனைய அதிகாரிகள் சிலரும் சிப்பாய்களும் கலந்துகொண்டிருந்தனர்.*



## 60 பவுண் நகைகளுடன் யாழ் வந்த சுவிஸ் தமிழ் குடும்பத்துக்கு நேர்ந்த கதி!

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் வீட்டில் ஆட்களில்லாத சமயத்தில் புகுந்த திருடர்கள் 60 பவுண் தங்க நகைகள், விலை உயர்ந்த சேலைகளை திருடிச் சென்றுள்ளனர். அன்று(2022.02.10) இந்த சம்பவம் நடந்தது. சுவிஸிலுள்ள குடும்பமொன்று அண்மையில் விடுமுறையில் வந்து, கோண்டாவிலிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளனர்.

அந்த வீட்டுக்காரர்களும், சுவிஸ் குடும்பமும் அன்று(02.10) காலையில் வீட்டை விட்டு புறப்பட்டு சென்றனர். இதன்போது, பெறுமதியான தங்க நகைகள், சேலைகளை அலுமாரிக்குள் மறைத்து வைத்து விட்டு சென்றுள்ளனர். மாலையில் வீடு திரும்பினர்.

அலுமாரியில் பொருட்கள் கிளறியிருந்ததை அவதானித்து, மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை தேடிய போது, அவை திருடப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## புலம்பெயர் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் விழிப்புணர்வு ஒன்றுக்கூடல்

*புலம்பெயரும் இலங்கையர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கமும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களான ஆண்களும் பெண்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம், பணிச் சுரண்டல், குடும்ப பிரச்சினைகள் ஆகியவற்றினால் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றது. எனவே இதுதொடர்பான விஷேட விழிப்புணர்வு ஒன்றுகூடல் SWOD அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையிலும் அதன் செயற்திட்ட இணைப்பாளர் கே. லதனின் வழிகாட்டலிலும் இறக்காமம் புலம்பெயர் தொழிலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவி எஸ்.டி. நஜீமியா தலைமையில் (10) இடம்பெற்றது.*

*இச்செயலமர்வில் இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களான உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். றிஸ்வானுல் ஜன்னாஹ், எஸ்.எல். ஸபூறுல் ஹஸீனா மற்றும் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எஸ்.எப்.றிஸ்மியா ஜஹான் மற்றும், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்களான கே.எம்.ஏ. அஸீஸ் மற்றும் பீ. புஷ்பராஜா ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் பிரிவுகள் ஊடாக வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் அவற்றினூடாக அடைந்து கொள்ளக்கூடிய நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வும் தெளிவுகளும் படுத்தப்பட்டன.*

*மேலும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படு தீர்வுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. புலம்பெயர் தொழிலாளர்கள் சம்மேளனத்தினை மேலும் வலுவூட்டி எதிர்காலத்தில் வினைத்திறனாக செயற்படுவதற்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டலும் உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்பட்டன.*





## போதைப்பொருள் வியாபாரி துப்பாக்கி மோதலில் பலி

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற துப்பாக்கி மோதலில் பாரியளவிலான போதைப்பொருள் வியாபாரி 'அப்பா' எனப்படும் துலான் சமீர சம்பத் கொல்லப்பட்டுள்ளார். மொரட்டுவ எகொட உயன பிரதேசத்தில் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பொலிஸ் அதிகாரியும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயம் அடைந்த துலான் சமீர மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

## இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சுங் பதவியேற்றார்

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சுங் பதவியேற்றுள்ளார். இலங்கைக்கான தூதுவராக ஜூலி சுங்கிற்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதில் பெருமையடைவதாக பிரதி இராஜாங்கச் செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மன் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

தூதுவர் சுங்கின் தலைமைத்துவம் அமெரிக்க மக்களை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கும், அமெரிக்க - இலங்கை கூட்டுறவை முன்னேற்றுவதற்கும் அவரை சரியான தேர்வாக ஆக்கியுள்ளது. எங்கள் பணியை ஒன்றாகத் தொடரக் காத்திருக்கிறேன் என பிரதி இராஜாங்க செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.





# சினிமா துளிகள்



## ஓடிடியில் வெளியாகும் பொன்னியின் செல்வன்?

ஜெயம் ரவி, கார்த்தி, விக்ரம், பிரகாஷ்ராஜ், பிரபு, ரகுமான், திரிஷா, ஐஸ்வர்யா ராய் போன்ற பல முன்னணி நடிகர்கள் நடிப்பில் இயக்குனர் மணிரத்னம் இயக்கி வரும் திரைப்படம் 'பொன்னியின் செல்வன்'.

இப்படத்தை லைகா நிறுவனம் வழங்க மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இரண்டு பாகங்களாக வெளியாகவுள்ள இந்தப் படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இதனிடையே பொன்னியின் செல்வன் படத்தை முன்னணி ஓடிடி நிறுவனம் நேரடியாக ஓடிடியில் வெளியிட பெரும் தொகை கொடுத்து வாங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனத்தின் சார்பில் 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் பெரும் பொருட்செலவில் "திரையரங்க வெளியீட்டுக்காகவே தயாராகி வருகிறது. ஓடிடியில் நேரடி வெளியீடு குறித்த தகவல்கள் அனைத்துமே வதந்தி.

இந்தப் பிரம்மாண்டத்தைத் திரையரங்கில் மக்கள் குடும்பத்துடன் கொண்டாட வேண்டும் என்றே நினைக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்கள்.

இப்படம் குறித்து அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகும் என ரசிகர்கள் எதிர்ப்பார்ப்போடு காத்திருக்கின்றனர்.



## பிரபல இயக்குனரின் படத்தில் ஹீரோவாகும் ராஜு

சின்னத்திரையில் மிகவும் பிரபலமான நடிகராக இருந்து வருபவர் ராஜு ஜெயமோகன், இவர் சின்னத்திரையில் ஒளிபரப்பான முக்கிய சீரியல்களில் நடித்துள்ளார்.

அதனை தொடர்ந்து சமீபத்தில் ஒளிபரப்பான பிக் பாஸ் சீசன் 5 போட்டியாளர்களின் ஒருவராக கலந்து கொண்டார். இந்த ஒரு நிகழ்ச்சியில் பெரியளவில் ரசிகர்களை கவர்ந்த ராஜு சீசன் 5 டைட்டில் வின்னராகவும் ஆனார்.

இந்நிலையில் ராஜு இனி சின்னத்திரையில் வரமாட்டேன் என்றும் திரைப்படங்களில் கவனம் செலுத்த உள்ளதாகவும் கூறியிருந்தார்.

அதன்படி வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினிமுருகன் உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குனர் பொன்ராம் படத்தில் ராஜு ஹீரோவாகவுள்ளதாக கூறப்படுகிறது. அவருக்கு ஜோடியாக பிரியா பவானி ஷங்கர் நடிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த தகவல் எந்தளவிற்கு உண்மையனே தெரியவில்லை, இது குறித்து அதிகாரப்பூர்வமான தகவல் வரும் வரை பொறுத்திருந்து பார்ப்போம்.



## சிவகார்த்திகேயன் படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது

சிவகார்த்திகேயன் நடிப்பில் சமீபத்தில் வெளியாகி வெற்றி பெற்ற திரைப்படம் டாக்டர். இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து சிவகார்த்திகேயன் 'டான்' மற்றும் 'அயலான்' படத்தில் நடித்து முடித்து இறுதிக்கட்ட பணிகள் நடந்துவருகிறது.

இப்படத்தைத் தொடர்ந்து சிவகார்த்திகேயன் அடுத்தாக தெலுங்கு சினிமாவின் முன்னணி இயக்குனர் அனுதீப் இயக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளதாக அறிவிப்பு வெளியானது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிமாஸ் நிறுவனத்துடன் இணைந்து சுரேஷ் புரொடக்‌ஷன் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு தற்காலிகமாக 'எஸ்.கே 20' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 'எஸ்.கே 20' படத்தின் படப்பிடிப்பு அன்று(10.2.2022) சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பூஜையுடன் தொடங்கியுள்ளது. தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் இப்படம் உருவாகி வருகிறது. இப்படத்தின் பூஜையில் எடுத்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவி வருகிறது.

இதில் சிவகார்த்திகேயன், சத்யராஜ் உள்ளிட்ட படக்குழுவினர் கலந்துகொண்டனர். 2013-இல் இயக்குனர் பொன்ராம் இயக்கத்தில் வெளியான 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தில் நடிகர் சத்யராஜ் மற்றும் சிவகார்த்திகேயன் இணைந்து நடித்திருந்தனர்.

அதன் பின் நீண்ட இடைவேளைக்கு பிறகு இந்த கூட்டணி இணைவதால் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்பு எழுந்துள்ளது.



## கௌதம் கார்த்திக் மற்றும் மஞ்சிமா மோகன் இருவரும் காதல்

தமிழ் சினிமாவில் கடந்த சில நாட்களாக சூப்பர் ஹாட் நியூஸ் ஒன்று சுற்றி வருகிறது.

என்ன தகவல் என்றால் தேவராட்டம் படத்தில் ஜோடியாக நடித்த கௌதம் கார்த்திக் மற்றும் மஞ்சிமா மோகன் இருவரும் காதலிக்கிறார்கள் என்று ஒரு நியூஸ்.

பிரபலங்கள் இருவரும் ஒன்றாக சென்னையில் ஒரு வீட்டில் இருந்நதாகவும் அவர்களது திருமண திகதி பிரபலங்கள் இடையே தெரியும் என்கின்றனர்.

அதோடு வரும் காதலர் தின ஸ்பெஷலாக இருவரின் திருமண செய்தி வெளிவருமாம்.

அண்மையில் மஞ்சிமா மோகன் FIR படத்தின் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது அவர் குண்டாக இருக்கிறார் என்று ரசிகர்களால் சமூக வலைதளங்களில் கிண்டலடிக்கப்பட்டார்.



## முதன்முறையாக கிளாமரில் களமிறங்கிய கீர்த்தி சுரேஷ் !


நடிகை கீர்த்தி சுரேஷ் தென்னிந்திய திரையுலகில் டாப் நடிகையாக திகழ்ந்து வருகிறார்.

இவர் நடிப்பில் கடைசியாக அண்ணாத்த திரைப்படம் வெளியானது, இப்படத்தில் அவர் சூப்பர்ஸ்டார் ரஜினிக்கு தங்கையாக நடித்திருந்தார்.

அதனை தொடர்ந்து இவர் நடிப்பில் சாணி காயிதம் திரைப்படம் வெளியாகவுள்ளது. சமீபத்தில் கூட இவரின் குட் லக் சக்கி திரைப்படம் வெளியாகி ஏமாற்றத்தை அளித்தது.

இந்நிலையில் தெலுங்கு சூப்பர் ஸ்டாரான மகேஷ் பாபுவிற்கு கீர்த்தி சுரேஷ் ஜோடியாக நடித்துள்ள திரைப்படம் சர்காரு வாரி பாட்டா. இப்படத்தின் முதல் சிங்கிள் பாடல் FEB 14 ஆம் திகதி வெளியாகவுள்ளது.

இந்நிலையில் தற்போது அப்பாடலின் அறிவிப்பு போஸ்ட்டரை வெளியிட்டுள்ளனர். அதில் நடிகை கீர்த்தி சுரேஷ் கொஞ்சம் கிளாமர் காண்பித்துள்ளார்.





# பல்சுவை கதம்பம்



## கற்றாழையை அடிக்கடி சாப்பிட்டு வருவதால் கிடைக்கும் நன்மைகள் !!

தினமும் காலையில் சிறிதளவு தோல் நீக்கிய கற்றாழையை ஜூஸ் போட்டோ அல்லது அப்படியே மென்று சாப்பிட்டு வந்தாலோ மலச்சிக்கல் நீங்கும். வயிறு, குடல்கள் போன்ற ஜீரண உறுப்புகளில் இருக்கும் பிரச்சனைகள் அனைத்தும் நீங்கும்.

கற்றாழையை அடிக்கடி சாப்பிட்டு வருபவர்களுக்கு உடலில் இருக்கும் அனைத்து உறுப்புகளில் தேங்கியிருக்கும் நச்சுக்கள் அனைத்தும் வெளியேறி உடல்நலத்தை மேம்படுத்துகிறது.

கற்றாழை இருக்கும் சத்துக்கள் உடலில் நைட்ரிக் ஆக்சைட், சைட்டோகைனின் போன்ற வேதிப்பொருட்களின் உற்பத்தியை நமது உடலில் அதிகரித்து நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

கற்றாழை தண்டுகளை தோல் நீக்கி, மிக்சியில் போட்டு நன்கு அடித்து கற்றாழை ஜீஸ் தயாரித்து, அதில் சிறிதளவு நாட்டு சர்க்கரை கலந்து சாப்பிடுவதால் உடல் வெப்பம் தணியும். சிலருக்கு கோடைகாலங்களில் ஏற்படும் நீர்சுருக்கு அல்லது மூத்திரசுருக்கு போன்ற பிரச்சனைகளும் நீங்கும். உடலுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு கற்றாழை சாறு மருந்தாக உட்கொள்ள நமது பாரம்பரிய மருத்துவத்தில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. கற்றாழை நச்சுத்தன்மைகளை எதிர்த்து போராடி அவற்றை அழிப்பதில் சிறப்பாக செயலாற்றுகிறது.

கற்றாழை ஜெல் பயன்படுத்துவதால் தோல் மிருதுவனதாக இருக்கும். முகப்பரு மற்றும் எண்ணெய் வழியும் முகத்தை தடுக்கவும் இந்த கற்றாழை பயன்படுகிறது.

கற்றாழையின் ஜெல் உங்களது முகத் தோலில் படிந்துள்ள கரும்புள்ளிகளை நீக்கி பொலிவுறச் செய்யும். மேலும், முகப்பருக்களை கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை கொண்டுள்ளது.



## கறிவேப்பிலையின் மருத்துவ குணம்

கறிவேப்பிலையில் நிறைய உயிர்ச்சத்தும் சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால், பதார்த்தங்களில் மிதக்கும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்துவிடக்கூடாது. ஆகாரத்துடன் அதையும் சேர்த்து மென்று விழுங்கிவிட வேண்டும்.

இந்தக் கறிவேப்பிலை பல வியாதிகளையும் தீர்க்கிறது. கறிவேப்பிலை உடலுக்கு பலம் உண்டாக்கக்கூடியது. பசியைத் தூண்டும் சக்தி வாய்ந்தது.

1. பித்தத்தைத் தணித்து உடல் சூட்டை ஆற்றும். அதோடு கறிவேப்பிலைக் கீரை மனதுக்கு உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. குமட்டல், சீதபேதியால் உண்டான வயிற்று உளைச்சல், நாட்பட்ட காய்ச்சல் ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். பித்த மிகுதியால் உண்டாகும் பைத்தியத்தைக் குணப்படுத்த கறிவேப்பிலை உதவுகின்றது.

2. வாந்தி, நாக்கு ருசியற்றுப் போதல், வயிற்றோட்டம், சாப்பிட்டவுடன் மலங்கழிக்கும் உணர்வு, பசியற்ற நிலை, சளி ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். கண்கள் ஒளி பெறவும், முடி நரைக்காமலிருக்கவும், மேனி எழில் பெறவும் கறிவேப்பிலை உதவுகின்றது.

3. கறிவேப்பிலைச் சாறு இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களைப் பலப்படுத்துகிறது. பத்திய உணவு சாப்பிடுபவர்கள் கறிவேப்பிலைத் துவையலை சேர்த்துக்கொள்வது நல்லது.

4. கண் ஒளி குன்றாமல், நரை திரை இல்லாமல் என்றும் இளமைப் பொலிவுடன் வாழ கறிவேப்பிலை அருமருந்தாக உதவுகிறது. அரோசிகம் எடுபட எந்த பதார்த்தத்தைச் சாப்பிட்டாலும் அது மண் போல ருசியறிய முடியாமலிருப்பதையே அரோசிகம் என்பர். அதாவது நாவில் ருசியறியும் உணர்ச்சி இழைகள் மறத்துப்போவதே இதற்குக் காரணம். இதைப் போக்க கறிவேப்பிலைத் துவையல் நன்கு பயன்படும்.

5. கறிவேப்பிலையை நன்கு அரைத்து அதனுடன் முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து தலைக்குத் தேய்த்து குளித்தால் முடி நன்றாக வளரும். இதற்குத் தேவையான அளவு கறிவேப்பிலையை எடுத்து, அதைச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து தேவையான அளவு இஞ்சி, சீரகம், புளி, பச்சை மிளகாய், உப்பு இவைகளை வைத்து மை போல துவையல் அரைத்து, சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் நாவில் ருசியறியும் தன்மை ஏற்படும்.

6. சுத்தமாக ஆய்ந்து எடுத்த கறிவேப்பிலையை அம்மியில் மை போல அரைத்து, அதை ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாற்றையும் விட்டுக் கலக்கி, தினசரி காலையிலும் மாலையிலும் சாதத்தில் போட்டுக் கலந்து சாப்பிடக் கொடுத்து விட வேண்டும். அடிக்கடி இந்த துவையலை சாதத்துடன் ருசித்துச் சாப்பிட்டு வந்தால் எந்த நோயும் வராது. உடல் உறுதி பெறும். பைத்தியம் தெளிய புத்திசுவாதீனமில்லாமல் இருப்பவர்களின் புத்தியை ஸ்திரப்படுத்தி ஒரு நிலையில் நிறுத்தி, அறிவில் தெளிவை உண்டாக்க கறிவேப்பிலை நன்கு பயன்படும்.

## அடிக்கடி பருக்களால் வரும் பிரச்சனைகளை சமாளிக்க சில வழிகள் !!

முகத்தில் கொழுப்பு அதிகமாக வெளியேறுதல், கிருமித் தொந்தரவு, ஹார்மோன்களின் ஏற்றத்தாழ்வு, ஒரு சில மருந்துகளால் பரு வரலாம்.

பரு தானாகப் பழுக்கும் வரை விட்டால் முழுமையாகப் பழுத்ததும் காய்ந்து, அதன் மேலே படலம்போல் ஒட்டிக்கொண்டிருந்த தோல் வெளிப்பட்டுவிடும். வடு இருக்காது.

கைகளால் நெருடிக் கிள்ளிவிடப்பட்ட பருவின் சீழ் அகன்றவுடன் தோலில் ஒரு பள்ளம் ஏற்பட்டு வடுவாக, நிலைத்து விடும். அடிக்கடி பருக்களைத் தொடுவதாலும் அழுத்துவதாலும் அவை பெருத்து ஆழமாக ஆகிவிடுவதும் உண்டு.

பருக்களைக் கிள்ளுவது தவறு. நெருடாமல், தொடாமல் இருந்தால் பருக்கள் வடுவின்றித் தாமே மறைந்துவிடும். கிள்ளுவதால் அரைகுறையாகப் பழுத்த பருக் கட்டி உடைந்து, அதனால் சுற்றுப்புற அழற்சி அதிகமாகி முகமெல்லாம் வீங்கி, காய்ச்சல், கடும் வேதனை போன்றவை ஏற்பட்டுப் பெரிய ஆபத்தில் கொண்டுபோய் விடுவதும் உண்டு.

துத்தி இலையை அரைத்துப் பருக்கள் மீது தடவிவரப் பருக்கள் மறையும். நன்னாரி வேர் கஷாயத்தால் பருக்கள் தீரும்.

வெட்டி வேர் நூறு கிராம், சந்தனத் தூள் 25 கிராம் ஆகிய இரண்டையும் தூள் செய்து நீர்விட்டுக் கலந்து கட்டிகள் மீது தடவிவர, முகப் பருக்கள், வேனல் கட்டிகள் மாறும்.

பாசிப் பருப்புப் பொடியுடன் நெல்லிக்காய் தூள் கலந்து சோப்புக்குப் பதில், தினசரிக் குளிக்கப் பயன்படுத்தினால் பரு மாறி உடல் ஒளிபெறும். ஜாதிக்காய், சந்தனம், மிளகு ஆகிய மூன்றையும் அரைத்துப் பற்று போட, பரு மறையும்.





## சருமத்தை பராமரித்து நல்ல நிறத்தை தக்க வைக்க உதவும் பச்சை பயறு !!

நீரில் கரையக்கூடிய, நீரில் கரையாத நார்ச்சத்தை அதிகம் கொண்டிருப்பதால், சரிவிகித உணவையும் உடலுக்குத் தேவையான ஊட்டத்தையும் பராமரிக்க உதவுகிறது. குறிப்பாக இதில் இருக்கும் நீரில் கரையக்கூடிய நார்ச்சத்து, எல்.டி.எல். கொலஸ்ட்ராலைக் குறைக்கவும் இதய நோய்களிலிருந்து பாதுகாக்கவும் செய்கிறது. ரத்தத்தில் மெதுவாகவும் படிப்படியாகவும் சர்க்கரைப் பொருளை இது வெளியிடுவதால், ரத்தச் சர்க்கரை அளவை பராமரிக்க உதவுகிறது.

பச்சைப் பயற்றை மட்டுமில்லாமல் எல்லாப் பயறு வகைகளையுமே தோலை அகற்றாமல், உடைக்காமல் பயன்படுத்துவதுதான் அதிக ஊட்டம் தரக்கூடியது. ஏனென்றால், தோலில் இரும்புச்சத்து இருக்கிறது. காலரா, தட்டம்மை, சின்னம்மையின்போது பச்சைப் பயறு ஊற வைத்த தண்ணீரைக் குடிப்பது உடலுக்கு நல்லதாகக் கருதப்படுகிறது. இது எளிதில் ஜீரணமாகக் கூடியது, மலத்தை இளக உதவுகிறது.

பச்சைப் பயறு மாவு அல்லது பயத்த மாவை சருமத்தில் தேய்த்துக்கொள்வது தோலைப் பராமரித்து, நல்ல நிறத்தைத் தக்க வைப்பதற்குப் பயன்படும். சோப்புக்குப் பதிலாகக் குளியல் பொடியாக இதைப் பயன்படுத்தலாம். குழந்தைகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும். தோல் நோய்களைக் கட்டுப்படுத்தும் 'நலங்கு மாவு' எனும் மூலிகைக் கலவையில், பச்சைப் பயறு சேர்க்கப்படுகிறது.



**என்றோ ஓர் நாள்!**
**மீண்டும் ஏற்க மறுக்த ஒன்றை**
**விடாபிடியாய் தந்து விட**
**வேறு வழிகளின்றி வேதனையில்**
**தவிக்கின்றேன்.**
**மீண்டும் தெரிந்தே பழகிய**
**நாட்களில்**
**ஒரு போதும் நினைத்ததில்லை**
**இப் பிரிவெனும் நாட்களின்**
**நரக வேதனையை...**

# 13வது திருத்தச்சட்டமும் முருங்கைமரம் ஏறும் வேதாளங்களும்



கடந்தவார தொடர்ச்சி...

அதாவது வடமாகாண சபை விரைவிலே வரும் நாங்கள் அதிலே பங்குபற்ற வேண்டும் இப்பொழுதிருந்தே நாங்கள் அந்த பொய்களை சொல்லிக்கொண்டு வந்தால் தான் மற்றவர்களுக்கு மேலாக நாங்கள் மக்களிடம் இந்த பொய்யை உண்மையாக்க முடியும் என்ற எண்ணத்திலே அவர்கள் சொல்லிக்கொண்டுவருகின்றார்கள்.

உண்மையாக 13வது திருத்த சட்டம் நண்பர் ஸ்ரீகாந்தா கூறியது போன்று தமிழர்களுக்கு ஒரு நிரந்தர தீர்வு அல்ல. அதிலே சைக்கிள் கட்சியாக இருந்தால் என்ன எங்களுடைய கட்சிகளாக இருந்தால் என்ன அதிலே எந்தவிதமான மறுகருத்திற்கும் இடமில்லை. 13வது திருத்த சட்டம் கொண்டுவந்த காலத்திலே திரு.அமிர்தலிங்கள். திரு. சிதம்பரலிங்கம், திரு. சம்பந்தன் ஆகியோர் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி ரஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். எங்களுக்கு இதுவொரு போதுமான சட்டமல்ல என்று அவர்கள் கூறியிருந்தார்கள். என்றாலும் அந்த குறைபாடுள்ள சட்டம் தான் எங்களுடைய அரசியல் யாப்பிலே உள்நுழைந்தது. இதுவரைகாலமும் அது அந்த அரசியல் யாப்பிலே இருக்கின்றது. அந்தடிப்படையில் நாங்கள் கேட்கும் ஒரு கோரிக்கை என்னவென்றால் இருக்கும் சட்டத்தை நீங்கள் நடைமுறைப்படுத்துங்கள் என்று இதில் என்ன பிழை இருக்கின்றதோ தெரியவில்லை. இருக்கும் சட்டத்தை நீங்கள் நடைமுறைப்படுத்துங்கள் புதிதாக நாங்கள் எதுவும் கேட்கவில்லை.

இதை வைத்துக்கொண்டு இருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்னும் பொழுது நாங்கள் 13 ஆம் திருத்த சட்டத்துக்குள்ளேயே போய் விட்டோம் எங்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை என்று கூறுவது போன்ற ஒரு மாயையை உருவாக்கத் தான் இந்த கட்சிக் கூட்டங்கள் தொடங்கியிருக்கின்றார்கள் அல்லது 30 ஆம் திகதி தொடங்கப்போகின்றார்கள். நாங்கள் கேட்பது இருப்பதை தருமாறு ஆனால் எங்களுடைய நிரந்தர தீர்வு சமஷ்டி முறையிலானது அல்லது கூட்டு சமஷ்டி முறையிலானது. இதை நாங்கள் எப்பொழுதுமே கூறியிருக்கின்றோம். நாங்கள் 13 ஆம் திருத்த சட்டத்தின் குறைபாடுகளை கூறிக்கொண்டு தான் நான் முதலமைச்சராக வந்தேன். முதலமைச்சராக இருக்கும்பொழுது அதனுடைய குறைபாடுகளை கூறிக்கொண்டிருந்தேன். அடுத்த மாகாண சபை தேர்தல் வந்தால் நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள் என்று கேட்டால் இப்பொழுதே அவர்களுக்குள் இரண்டு மூன்று பேர் இருந்து கொண்டு அடிபட்டு செய்கின்றார்கள் தாங்கள் தான் முதலமைச்சர் வேட்பாளராக வரவேண்டும் என்று.

எனவே ஒரு அதிகாரமும் இல்லாத மாகாண சபைக்கு முதலமைச்சராக வரவேண்டும் என்று அவர்களுக்குள் தற்பொழுதே பிரச்சனைகள் இருக்கின்றன அடிபட்டுக்கொண்டும் இருக்கின்றனர். அவ்வாறு செய்பவர்கள் எதற்காக இதைப்பற்றி இப்படி பொய்களை எல்லாம் கூறவேண்டிய அவசியம் இருக்கின்றது? ஒரு பொய்யைதிரும்ப திரும்ப சொன்னால் அது உண்மையாக வரும் என்று அவர்கள் நினைத்துக்கொண்டு தான் இந்த பொய்களை சொல்லியிருக்கின்றார்கள். நண்பர் கூறியதைப் போன்று இவ்வாறான பொய்களை கூறும்பொழுது நாங்கள் அதற்குரிய எதிர்ப்பு கருத்துக்களை நாங்கள் முன்வைக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது. 13வது திருத்த சட்டம் ஒற்றையாட்சியின் கீழ் இருக்கும் ஒரு சட்டம் ஒற்றையாட்சி என்று கூறும்பொழுது பெரும்பான்மை மக்களுக்கு அதிலே கூடிய அதிகாரம் இருக்கின்றது. தாங்கள் நினைத்ததைப்போன்று அவர்களுக்கு செய்ய முடியும். எந்தவொரு கட்சி மத்தியில் இருக்கின்றதோ அதனால் அந்த 13வது திருத்த சட்டத்தை திருத்தி அமைக்கமுடியும் அவ்வாறு தான் 1992 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தி அமைத்தார்கள்.

தற்போதைய அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர், கிராம சேவகர் இவர்கள் அனைவரும் மாகாணத்தினுடைய அதிகாரத்தின் கீழ் இருந்தவர்கள். ஆனால் அவர்களை மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தார்கள் இந்த சட்டத்தின் மூலமாக. ஏன் ஒற்றையாட்சி இருந்ததன் காரணமாக. அவர்களுடைய அந்த அதிகார மையம் அவர்களிடம் இருந்தது. இந்த அடிப்படையில் ஒரு ஒற்றையாட்சியின் கீழ் எங்களுக்கு கிடைக்கக்கூடியது அதிகார பரவலாக்கம். நாங்கள் கேட்பது அதிகாரப்பகிர்வு இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே நாங்கள் இப்பொழுது கேட்பது அதிகார பரவலாக்கம் காரணம் தற்பொழுது எங்களுடைய காணிகள் கைவிட்டுப்போய்க்கொண்டிருக்கின்றன. அரசாங்கம் எங்களுடைய காணிகளை எல்லாம் கைப்பற்றிக்கொண்டிருக்கின்றார்கள். சிங்கள மயமாக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். 5000 சிங்கள மக்களை கொண்டுவந்து வவுனியாவில் ஒரு பகுதியில் குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றது. பலவிதமான எங்களுடைய வளங்கள் எல்லாம் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக கடலுக்கு செல்ல முடியாமல் வெளி இடங்களில் இருந்து வந்தவர்கள் அந்த வேலைகளை செய்துகொண்டிருக்கின்றார்கள் அதுவும் சட்டத்திற்கு புறம்பான விதங்களிலேயே. அதைவிட 65 ஆயிரம் அரசாங்க காணிகளிலேயே இராணுவத்தினர் குடிகொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே நாங்கள் ஒரு இராணுவ அதிகாரத்தின் கீழ் தான் இந்த வடமாகாணம் தற்பொழுது இருந்து கொண்டிருக்கின்றது கிழக்கு மாகாணமும் அதே மாதிரி. எனவே தான் நாங்கள் தற்பொழுது இருக்கும் நிலைமையை புரிந்து உணர்ந்து அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்ற முறையிலே தற்பொழுது இருக்கும் அரசியல் யாப்பின் ஒரு அங்கமான 13ஆம் திருத்த சட்டத்தைநடைமுறைப்படுத்தவேண்டும்என்று கோருகின்றோம். கோரி ஒரு கடிதத்தை திரு மோடி அவர்களிடம் கையளித்திருக்கின்றோம். மோடி அவர்களிடம் ஏன் போனீர்கள் நாங்கள் தருவோமே என்று சிலர் அரசாங்கத்துடன் சேர்ந்து கேட்கின்றார்கள். உங்களிடம் தான் 73வருடங்களாக நாங்கள் கேட்கின்றோம் ஒன்றுமே நடக்கவில்லையே. ஆகவே தான் இந்த 13ஆம்திருத்த சட்டம் கொண்டுவருவதற்கு உதவியவர்கள் அதன் ஆரம்பகர்த்தாவாக இருந்த இந்திய அரசாங்கத்தை நாங்கள் இந்த கோரிக்கையை அவர்களிடம் விடுத்திருக்கின்றோம். இதிலே அதிகார பரவலாக்கம் அதிகாரப்பகிர்வு என்பதை நாங்கள் நன்றாக அறிந்திருக்கவேண்டும். தற்பொழுது நாங்கள் அந்த அதிகார பரவலாக்கத்தை எடுப்பதன் மூலமாக நடந்துகொண்டிருக்கும் பலவிதமான எங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நாங்கள் ஓரளவுக்கு தடுத்து நிறுத்த முடியும். இதைத் தான் நான் முன்னர் முதலமைச்சராக இருந்தபொழுது தடுத்து நிறுத்தக்கூடியதாக இருந்தது. அந்த காலத்தில் எத்தனையோ பேர் எத்தனை விதமாக இங்கு உள்ளிட பிரயத்தனம் எடுத்தபோது அவற்றை நாங்கள் தடுத்து நிறுத்தினோம். எனவே தான் இருக்கும் ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு இருக்கும் நிலைமையை சீராக்குவது ஒன்று. இதை நிரந்தர தீர்வு என்று சொல்லிக்கொண்டு திரிவது பிழை. நாங்கள் நிரந்தர தீர்வாக இதை எந்த காலத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அதுவொரு சமஷ்டி ரீதியானது அல்லது கூட்டு சமஷ்டி ரீதியானதாக இருக்க வேண்டும். சமஷ்டி கூட்டு சமஷ்டியில் சில வித்தியாசங்கள் இருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டணி தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஒரு கூட்டு சமஷ்டியை கோருகின்றது. காரணம் சமஷ்டியிலும் கூடிய அதிகாரங்கள் கூட்டு சமஷ்டியின் கீழ் வரக்கூடும். என்ற முறையிலே நாங்கள் அதனை கேட்டிருக்கின்றோம்.

எனவே எங்களுடைய அதிகாரத்தை நாங்கள் பாதுகாக்க வேண்டும் என்று எங்களுடைய யாப்பிலேயே இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்றோம். அவ்வாறு குறிப்பிடும் நாங்கள் 13ஆம்திருத்த சட்டத்துக்குள் போய் சங்கமம் ஆகிவிட்டோம் என்று பொய் கூறுவது எந்தவிதத்திலும் சரியில்லை. இது அரசியல் ரீதியாக அரசியல்வாதிகள் செய்யும் பொய்யை கொபெல்ஸ் அன்று செய்ததை இப்பொழுது சிலர் செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்தவிதத்திலே ஒருசில விடயங்களை நாங்கள் மனதிலே நிலைநிறுத்த வேண்டும் வருங்காலத்திலே எங்களுடைய தமிழ் மக்களினுடைய இருப்பு தற்பொழுது ஒரு பிரச்சனையாக இருந்து கொண்டுவருகின்றது. எனவே எங்களுடைய இனப்பரம்பல் மாற்றமடைய மாற்றமடைய சிங்கள ஆதிக்கம் மேலோங்க நாங்கள் எத்தனை வருட காலத்திற்கு பின்னர் சமஷ்டியை பெறப்போகின்றோமோ அந்த நேரத்திலே இங்கிருப்பவர்கள் தமிழ் மக்களாக இருக்கமாட்டார்கள். கூடியவர்கள் சிங்களம் பேசும் தமிழ்மக்களாக இருக்கக்கூடும்.

எனவே நாங்கள் எங்கோ ஒருநாள் வரக்கூடியதற்காக தற்பொழுது இருக்கும் சில உரித்துக்களை கைவிடுவது பிழையானது. உதாரணத்திற்கு ஒரு மண்வெட்டி மலுங்கியிருக்கின்றது. நாங்கள் ஒரு புது மண்வெட்டி எங்கோ இருந்து வேண்டிவரவேண்டியிருக்கின்றது என்று பார்ப்போம். தற்பொழுது அது வரும் வரையிலே இதை நாங்கள் பாவிப்பதில் பிழையில்லை. சரியாக பாவிக்க முடியாது ஆனால் சில சில வேலைகளை அதைக்கொண்டு செய்யலாம். இவர்கள் கூறுவது என்ன இதைப்பாவிக்காதீர்கள் அது வரும் வரை இதை வைத்துக்கொண்டு இருங்கள். கூடிய மக்கள்சிங்களம் பேசுபவர்களாக மாறிவிடுவார்கள் எனவே தான் நான் கூறுகின்றேன் இந்த பிழையான ஒரு கருத்தை மக்களுக்கு எடுத்து கூறி பிழையான விதத்தில் அவர்களை ஆற்றுப்படுத்திக்கொண்டு செல்வது வருந்தத்தக்கது. இதனை இந்த சைக்கிள் கட்சி செய்யக்கூடாது என்று அவர்களிடம் கோருகின்றேன்.

ஏனென்றால் 13ஆம் திருத்த சட்டத்தை தேவையில்லை என்று சொல்லிவிட்டு அதே 13 ஆம் திருத்த சட்டத்தின் கீழ்வரும் மாகாணசபையிலே முதலமைச்சராவதற்கு அவர்களுடைய கட்சிக்காரர்கள் சண்டைபிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே தான் இந்த இரட்டை கருத்துக்களை ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை அவர்கள் மக்களுக்கு கொடுத்து மக்களை பிழையாக ஆற்றுப்படுத்தக்கூடாது என்று கூறி என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கின்றேன்.

**தொடரும்...**

02ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த சமூகத்தின் புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள் எனப் பலரும் ஒருபக்கச் சார்பாக அணுகி கருத்துக்களைத் தெரிவித்து இரண்டு இனங்களுக்கிடையிலான இனமுறுகலை ஏற்படுத்திக்கொண்டிருப்பது கண்டனத்திற்கும் வருத்தத்திற்குமுரிய ஒரு விடயமாகும். பலரின் கேள்விகளுக்கு குறிப்பாக எமது பாடசாலையில் கல்வி கற்றும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாடு எங்களுக்கு உள்ளது. இது தொடர்பாக எமது பாடசாலையின் அதிபர் அவர்கள் நடந்த சம்பவத்தை தெளிவாகக் கூறியுள்ளார். இச்சம்பவத்தில் தாக்கப்பட்ட எமது அதிபர் அவர்கள் காலை திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். அந்தவேளையில் ஏறத்தாழ 30 நிமிடங்களின் பின்னர் சம்பந்தப்பட்ட ஆசிரியையும் அதே வைத்தியசாலையில் அதே அறையில் அனுமதிக்கப்பட்டார். இதனுடைய உண்மைத்தன்மையை வைத்தியசாலையின் பதிவேடுகளில் எவரும் அறிந்துகொள்ள முடியும். ஆசிரியர் பஹ்மிதா அவர்கள் கல்வியியற் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஒரு ஆசிரியை. அங்கு பயிற்றப்படும் போது கல்வியியற் கல்லூரியின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக சாரி அணிந்து ஸ்காப் அணிந்து ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றார். அதன் பின்னர் அவராகவே விருப்பப்பட்டு 2013ஆம் ஆண்டு எங்களுடைய பாடசாலைக்கு நியமனம் பெற்று வந்தார். அவர் கடமைக்கு வந்த காலத்திலிருந்து அதாவது 2013-2018 ஏப்ரல் வரைக்கும் ஆசிரியர் ஒழுக்கக்கோவைக்கு அமைவாக சாரி அணிந்து பர்தா அணிந்தே பாடசாலையில் கடமைகளை ஆற்றிக்கொண்டிருந்தார். கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் நிகழ்வுகள் மற்றும் தங்கம்மா சண்முகப்பிள்ளை அவர்களின் கூட்ட நிகழ்வில் கூட அவர் சந்தோசமாக பங்குகொண்டு தனது கடமைகளை ஆற்றிக்கொண்டிருந்தார். இவ்வாறு சிநேகபூர்வமான இந்த பஹ்மிதா ஆசிரியரின் இந்த சிந்தனை எவ்வாறு பாடசாலையின் ஒழுக்க விழுமியங்களுக்கு முரணாக உருப்பெற்றது என்பது விளக்கமில்லை. இதனது பின்னணி என்ன என்பதும் விளங்கவில்லை. ஆசிரியரின் இந்த முரணான சிந்தனையும் செயற்பாடுகளும் இன்றுவரை நடைபெற்ற அத்தனைப் பிரச்சினைகளுக்கும் வித்திட்டதாகத்தான் கருதவேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் மதவாதம் தலைதூக்குகின்ற ஒரு சூழலை இவ்வாறான பிரச்சினைகள் உருவாக்குமாகவிருந்தால் அதனை தடுத்துநிறுத்துவதற்கு நீதித்துறை முன்வந்து செயற்படவேண்டும். 99 வருடங்கள் பழமைவாய்ந்த இந்தப் பாடசாலைக்கு என ஒரு வரலாறு இருக்கின்றது. இதனை பலர் ஒரு தீவிரவாதப் பார்வையுடன் தமது கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றார்கள். ஏற்கனவே மதரசாக்கள் தடைசெய்யப்படவேண்டும். ஹலால் விவகாரம், பர்தா விவகாரம் என்று அரச தரப்பால் பல பிரச்சினைகள் கடந்த காலங்களில் எழுப்பப்பட்டது. அதனை எதிர்த்து நீதிமன்றிலும் வழக்குகளும் தொடுக்கப்பட்டன. ஆனாலும் தற்போது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற செயலணியின் தலைவரான கலகொட அத்தே ஞானசாரர் அவர்கள் இவ்விடயம் தொடர்பில் மௌனமாக இருப்பதன் செயற்பாடானது சந்தேகத்தைக் கூட ஏற்படுத்துகிறது. ஏற்கனவே சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக இவரால் பல கருத்துக்கள் கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டு வந்தமை பலரும் அறிந்த ஒன்றே.

குறித்த பாடசாலையில் தமிழ் மற்றும் முஸ்லீம் மாணவிகளும் இணைந்தே மகிழ்வாகக் கல்வி கற்கிறார்கள் என்பதை நினைவிற்கொண்டு மாணவர்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் நோக்கி சமூகமாகிய நாம் செயற்படக்கூடாது. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் பாடசாலையில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும் என்பதுவே உண்மை. ஆகவே இப் பிரச்சினையை நீண்டதூரம் நகர்த்திச்செல்லாது. பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் செயற்படவேண்டும் என்பதே இன்றைய யதார்த்த பூர்வமான உண்மை.


# வரலாறாக மாறிய சில காதல் கதைகள்!

ஒவ்வொருவரின் காதல் கதை மிகவும் சுவாரஸ்மானதாக இருக்கும். அதனை வாழ்ந்து காட்டியிருக்கும் அந்த காதலர்களுக்குத் தான் அதனுடைய வீரியம் புரியும். ஆனால் அவர்களின் காதல் மூலமாக இன்று வரை நம் நினைவில் வாழுகின்ற சில காதலர்களைப் பற்றி தெரியுமா?

இன்றைக்கு இருப்பதைப் போன்ற வசதிகளும் வாய்ப்புகளும் அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. ஏராளமான சமுதாய அடக்குமுறைகளை தாண்டியே தங்களின் காதலை வளர்த்தெடுத்திருக்கிறார்கள். பல்வேறு இன்னல்களை கடந்து காதலில் ஜெயித்து காட்டிய அவர்களின் ஒவ்வொரு கதையுமே நமக்கு இன்ஸ்பிரேஷன்!!!!!

மனிதனின் நாகரிகம் துவங்கிய காலத்தில் இருந்தே காதல் என்ற உணர்வும் இருக்கிறது. அன்றைய தினத்திலிருந்து இன்று வரை உயிர்ப்புடன் இருப்பதும் அந்த காதலே...

## ஷாஜஹான் மும்தாஜ்



ஆக்ரா அரண்மனை வளாகம். ஆண்டுதோறும் நடக்கும் சந்தை. ஒரு மாலை இளவெயில் நேரம் ஷாஜகான் சந்தைக்கு வந்தான். அங்கே ஒருகடையில் பேரழகியைச் சந்தித்தான்.

அவள் பெயர் அர்ஜீமான் பானு. அவர்களுக்குள் அரும்பியது காதல். ஷாஜகான் தான் காதல் வயப்பட்டதை அப்பா ஜஹாங்கீரிடம் கூற அவர்கள் இருவருக்கும் திருமணம் இனிதே நிறைவேறியது. மன்னர், அர்ஜீமான் பானுவிற்கு மும்தாஜ்பேகம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

ஷாஜகானுக்கும் மும்தாஜ்பேகத்திற்கும் சம வயது. ஆயினும் அவர்களின் மாறாத அன்புக்கு அடையாளமாக பதினான்கு குழந்தைகள் பிறந்தன. மன்னர் மத்திய இந்தியாவை நோக்கி படையெடுத்து சென்றபொழுது தான் மும்தாஜிக்கு 14வது குழந்தை பிறந்தது.

பிரசவத்தின்போது மும்தாஜ் ஜன்னி கண்டு இறக்க அவள் தந்த தீராத காதலின் நினைவாக, ஷாஜஹானால் கட்டப்பட்டது தாஜ்மஹால்.

## அம்பிகாபதி அமராவதி



கம்பனின் மகன், அம்பிகாபதி.குலோத்துங்க சோழனின் இளவரசி, அமராவதி.கல்வியை கற்றுக்கொள்ள கம்பனின் வீட்டிற்க்கு வந்து சென்ற அமராவதி கம்பன் இல்லாத நாளில் அமராவதியிடம் காதலைக்கற்றுக் கொண்டாள்.

காதலை அறிந்த மன்னன் அம்பிகாவதியை கைது செய்து குற்றவாளியாக்கினான். சிற்றின்பம் கலக்காமல் நூறு பாடல்கள் பாடினால், அம்பிகாபதி கிடைப்பாள் என்று ஒட்டக்கூத்தர் ஒரு போட்டியை அறிவிக்க மன்னரும் அமராவதியும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

அமராவதி கடவுள் வாழ்த்தைச் சேர்த்து நூறு பாடல்களை பாடி முடிக்க அம்பிகாவதி அவனை ஆரத்தழுவிக்கொள்கிறாள்.கடவுள் வாழ்த்தை சேர்க்காமல் 99 பாடல்கள் தான் பாடப்பட்டது என தீர்ப்பு வர குலோத்துங்கன் அம்பிகாபதிக்கு மரணதண்டனை விதிக்கிறான்.

அம்பிகாபதி இறந்த செய்தி கேட்டு ஓடிவந்து அவனது மார்பில் விழுந்து உடன் அமராவதியும் இறக்கிறாள்.

## லைலா மஜ்னு



அரபு நாட்டில் சிறுகிராமம். அங்கு பள்ளியில் கல்விகற்கும்போது இருவருக்கும் தொடங்கிய நட்பு வயது ஏற ஏற காதலாக மாறியது. காதலை அறிந்த பெற்றோர் லைலாவின் கல்விக்கு தடைவிதித்தனர். ஒரு செல்வந்தனுக்கும் லைலாவுக்கும் திருமணத்தையும் நடத்தி முடித்தனர்.

திருமணம் முடிந்தாலும் மஜ்னு நினைப்பிலேயே இருந்தால் லைலா, அவனைத்தேடி பல இடங்களில் அலைந்தாள். அவனை மீண்டும் சந்தித்தபோது அவனும் அவள் நினைவிலேயே இருப்பதை அறிந்த அவளுக்கு அவன் மீது இருந்த காதல் பலமடங்கு அதிகமானது.

இதை அறிந்த லைலாவின் பெற்றோர் லைலாவை வீட்டுக்காவலில் வைத்தனர். மஜ்னுவை மறக்க இயலாத லைலா அவனது நினைவாலேயே இறந்துபோனாள். அதை அறிந்து மஜ்னுவும் இறந்தான்.

## ரோமியோ ஜூலியட்



இருவர் வீட்டிற்கும் முன்பகை இருந்தது. ஒருவிருந்தில் கலந்துகொண்ட ரோமியோவும் ஜுலியட்டும் அங்கு சேர்ந்து நடனமாடநேர்ந்தபோது காதல் மலர்ந்தது.

குடும்பப் பகை அவள் காதலுக்கு குறுக்கே வந்தது. காதலுக்காக விஷம் குடித்ததுபோல் நடித்தாள் ஜுலியட். இதை நாடகம் என்று அறியாத ரோமியோ விஷம் அருந்தி இறக்க,

அவன் குடித்து மீதி வைத்த விஷத்தினை அருந்தி உயிரைவிட்டாள் அவனது காதலி ஜுலியட்.

சேர்ந்த காதல் அல்ல சேராத காதலே
காவியமாக்கப்படுகின்றது.

என்னை மீறியும்
நேசித்தேன்
எல்லை மீறியும்
நேசித்தேன்
அதனால் தான்
என்னவோ
இன்று
தன்னை மீறி
கலங்குகிறது
கண்கள்

எனக்கு பிடித்தது
போல
அவளை படைத்த
இறைவன்
அவளுக்கு
பிடித்தது போல
என்னை
படைக்க மறந்து
போனது
ஏனோ...

உன்னுடன் ஓர் நாள்
உண்மையில்
ஒரு நாளாவது உன்னுடன்
வாழ ஆசைப் படுகின்றேன்!
காமம் கலக்காத காதலுடன்!
கரைந்து விழும் கண்ணீரை கூட
சேர்த்து வைத்திருக்கின்றேன்!
ஆறுதலாய் உன் விரல்கள்
துடைத்துவிடும்
என்பதற்க்காக!
உன் மடியில் கண்ணுறங்க என்
உறக்கங்களையெல்லாம்
சேர்த்து வைத்திருக்கின்றேன்!
நீ ஊட்டிவிடும் ஒரு வாய்
சோற்றிற்க்காக எனது
பசியைக் கூட
தாங்கியிருக்கின்றேன்!
உண்மையில்
ஒரு நாளாவது உன்னுடன்
வாழ ஆசைப் படுகின்றேன்

காதலை கேட்டேன்,
காயங்கள்
தந்தாய்.....!
காலத்தின்
மாறுதலால்
காயங்கள்
ஆறினாலும்,
காயத்தின் வடுக்கள்
ரணமாய்
வலிக்கத்தான்
செய்கிறது!

மறுக்கப்பட்ட
காதலோ அல்லது
மறைக்கப்பட்ட
காதலோ ஏதோ
ஒன்று
நிச்சயம் எல்லோர்
மனதிலும்
மறக்கப்படாமல்
வாழ்ந்து
கொண்டிருக்கும்
இறுதிவரை

# காதலர் தினம்

புனித வேலன்டைன் நாள் (Saint Valentine's Day) அல்லது பொதுவாக வேலன்டைன் நாள் (Valentine's Day) உலகம் முழுவதிலுமுள்ள மிக நெருங்கிப் பழகும் மக்கள் பலராலும் பிப்ரவரி 14 அன்று கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும். இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலை தெரிவித்துக் கொள்வது மரபாக இருக்கிறது. வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாறிக் கொள்கிறார்கள். வேலன்டைன் என்ற பெயருடைய இரு கிறிஸ்துவத் தியாகிகளின் பெயர்களை அடுத்து இந்நாள் வேலன்டைன் நாள் என்றும் காதலர்களே பெரும்பாலும் இந்நாளைக் கொண்டாடுவதால் காதலர் நாள் என்றும் காதலர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது. காதலர்கள் தவிர பலரும் தங்கள் அன்பை தெரிவித்துக் கொள்ளும் நாளாகவும் இது இருப்பதால் அன்பர்கள் நாள் என்றும் அழைக்கப்படுகிறது. தோற்றத்தில் இது மேற்கத்திய உலகக் கொண்டாட்டமாக இருந்தாலும், அண்மைக் காலங்களில் உலகெங்கும் இந்நாளை கொண்டாடும் போக்கு இளைஞர்களிடையே கூடி வருகிறது. எனினும், இது மேலை நாட்டுப் பண்பாடுகளை திணிக்கும் முயற்சி என்றும் காதலின் பெயரால் நினைவுப் பரிசுப் பொருட்களை விற்கும் வணிகமயமாக்கம் என்றும் ஒரு சாராரால் குற்றம் சாட்டப்படுகிறது.

இந்த நாள், நேர்த்தியான காதல் என்ற கருத்து தழைத்தோங்கிக் கொண்டிருந்த உயர் மத்திய காலத்தைச் சேர்ந்த ஜெஃப்ரி சாஸர் வட்டத்தில் உருவாகியிருந்த ரொமாண்டிக் காதல் என்ற விஷயத்தோடு தொடர்புகொண்டிருந்தது. "வாலண்டைன்கள்" வடிவத்தில் காதல் குறிப்புகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுவதோடும் இந்த நாள் நெருக்கமாக சம்பந்தப்பட்டிருந்தது. இதய வடிவலான உருவம், புறாக்கள் மற்றும் சிறகுகளுள்ள தேவதையின் உருவம் ஆகியவை நவீன காலத்திய காதலர் தின குறியீடுகளில் அடங்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல், கையால் எழுதப்படும் குறிப்புகள், பெருமளவில் தயாரிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளுக்கு வழிவிட்டிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு இங்கிலாந்தில் வாலண்டைன்களை அனுப்புவது ஒரு நாகரீகமாக இருந்தது. 1847 ஆம் ஆண்டில் எஸ்தர் ஹாவ்லண்ட் தன்னுடைய வொர்ஸ்டர், மாசாசூஸெட்ஸ் வீட்டில் ஆங்கிலேய உருமாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு வாலண்டைன் அட்டைகளை கையால் செய்யும் தொழிலை வெற்றிகரமாக உருவாக்கினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு அமெரிக்காவில், தற்போது காதலை வெளிப்படுத்துவதைக் காட்டிலும், பொதுவான வாழ்த்து அட்டைகளாக உள்ள பல வாலண்டைன் அட்டைகளும் பிரபலமாக இருந்தபோது அமெரிக்காவில் விடுமுறை தினங்கள் வணிகமயமாவதற்கான எதிர்கால முன்னறிவிப்பாக இருந்துள்ளது.

கிறிஸ்துமஸ் தினத்திற்கு அடுத்தபடியாக, வாழ்த்து அட்டை அனுப்புவதில் இரண்டாவது இடத்தில் உள்ள கொண்டாட்ட தினமான வாலண்டைன்ஸ் தினத்தில் உலகம் முழுவதிலும் வருடத்திற்கு ஏறத்தாழ ஒரு பில்லியன் வாலண்டைன் அட்டைகள் அனுப்பப்படுவதாக அமெரிக்க வாழ்த்து அட்டை அமைப்பு கணக்கிட்டுள்ளது. இதற்காக அமெரிக்காவில் பெண்களைவிட ஆண்கள் சராசரியாக இரண்டு மடங்கு செலவிடுகிறார்கள் என்று இந்த அமைப்பு கணக்கிட்டுள்ளது.

# முஸ்லீம் சமூகம் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசலாம் ஆனால் வன்முறையை தூண்டிவிடக்கூடாது – ஹரீஸ் எம்.பி

**முஸ்லீம் காங்கிரசினுடைய பிரதித்தலைவரும், கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹரீஸ் அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**



கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : இதில் நீங்கள் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் நீங்கள் குரல் கொடுக்கவில்லை என்னும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் தான் சாணக்கியன் அவர்கள் கூறியிருந்தால் அதாவது பள்ளிவாசல்களை உடைத்தார்கள் அரசாங்கத்திற்கு எதிராக அப்படியாக இருந்தால் உங்களுடன் நீதி அமைச்சரும் இருக்கின்றார். அரசாங்கத்திற்கு எதிராக போர் கொடியை தூக்கியிருக்கலாம் தானே,?**

பதில் : சாணக்கியன் அவர் தற்பொழுது தான் எம்பியாக வந்திருக்கின்றார். எங்களுடைய முஸ்லிம்களின் பிரச்சனையாக இந்த நாட்டில் நான் அறிந்த வகையில் 1915 பேருக்கு பிரச்சனைகள் இருக்கின்றது. அதில் இந்த நாட்டில் சிங்கள முஸ்லிம் கலவரம் பெரும் எடுப்பில் நடைபெற்றிருக்கின்றது. அந்த நேரத்தில் முஸ்லிம்களுக்காக இருந்தவர்கள் முஸ்லிம் தலைவர்கள். பிரிட்டிசில் நடைபெற்ற வழக்கில் வாதாடினார்கள். எனவே அதற்கு பின்பு பல முஸ்லிம்களுக்கு எதிராக பல விடயங்கள் இந்த நாட்டில் நடைபெற்றது உங்களுக்கு தெரியும். 1985 காலப்பகுதிக்கு பின்பு முதலாவது எங்களது முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டது. இயக்க வன்முறைக்கு மத்தியில் எங்களுக்கு என்று தலைவரும் இருக்கவில்லை. தமிழ் தலைமைகளும் மிதவாத அரசியல் தலைவர்களும் கூட இயக்கங்களுக்கு எதிராக பேசுவதற்கு அஞ்சியிருந்தார்கள். எங்களுடைய முஸ்லிம் தலைவர்களாக அன்று பாராளுமன்றத்தில் இருந்தவர்கள் அஞ்சியிருந்தார்கள்.

இதில் தைரியமாக வந்த ஒரு தலைவர் தான் அஷ்ரப். எங்களைப்போன்ற சிறுவர் போராளிகள் கட்டியெழுப்பப்பட்ட செதுக்கி எடுக்கப்பட்ட ஒரு தூய்மையான பரிபூரணமான மிகச்சிறந்த இராணுவ ஒரு தலைமைக்குரிய தைரியமாக ஆளுமைமிக்க ஒரு தலைமை. அந்த தலைமை வந்த பின்பு நாங்கள் 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் முதலாவது மிகப்பெரிய அடிமை சாசனம் எங்களுக்கு கட்டவிழ்த்துவிடப்பட்டது. அதில் தமிழ் தலைமைகள் பெரும் வரலாற்று சாதனையை செய்தார்கள். எங்களுடைய கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை அடிமைப்படுத்தினார்கள்.

1990 ஆம் ஆண்டு பெரும் இன சுத்திகரிப்பு யாழ் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட விடயம். இதற்கு பின்பு தெற்கில் பிரபாகரனுடைய இறப்போடு 2014 இல் தெற்கு தலைமையினுடைய இனவாத அமைப்பு எங்களை நோக்கி நிறைவேறியது. வரலாறு என்பது கண்டியில் இடம்பெற்ற பிரச்சனை அம்பாறையில் இடம்பெற்ற பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்ட சம்பவமாக இருக்கட்டும் இறுதியாக சஹ்ரானின் பிரச்சனை இவை அனைத்திற்கும் சாணக்கியன் வந்தாரா அல்லது அவரது தந்தை வந்தாரா பாட்டன் வந்தாரா இல்லையே முஸ்லிம் எம்பிமார்கள் தானே களத்தில் நின்றார்கள். ரவூப் ஹக்கீம் 2002 இல் அமைச்சுப் பதவியை தூக்கி எறிந்தார் சந்திரிக்காவின் முகத்தில். 2019 இல் நான் இராஜாங்க அமைச்சர் நான் முன் நின்று அத்தனை அமைச்சர்களையும் இராஜினாமா செய்ய வைத்தேன். அப்படி முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பிற்காக முன் நின்ற எங்களை பார்த்து தற்பொழுது இவர்கள் ஒன்றும் செய்யவில்லை சோம்பேறி கூட்டம் என்று சொன்னால் 20 எம்பிமார்களை இதனை எப்படி ஏற்றுக்கொள்வது. நாங்கள் அரசாங்கத்துடன் இருந்து அந்த பிரச்சனைகளைப்பற்றி பேசுகின்றோம்.

ஜேனாசா பிரச்சனையை மிக உச்ச கட்டமாக இராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்து வெளிநாட்டு முஸ்லிம் நாடுகளை அணுகி அவர்களின் அழுத்தத்தை அரசாங்கத்திற்கு கொடுத்து குறிப்பாக பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வந்த பொழுது அவர் பேசி அதற்கு பின்னர் அது வெற்றியடைந்ததே தவிர சும்மா பாராளுமன்றத்தில் 4 பேர் பேசியதற்காக ஜனாதிபதி கோட்டபாய அரங்கிற ஆளா நீங்கள் சொல்லுங்கள். பாராளுமன்றத்தில் எழும்பி கத்தியதற்காக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் அடங்கி சாணக்கியன் பேசிவிட்டார் சிறிதரன் பேசிவிட்டார் என்பதற்காக தீர்மானம் எடுக்கிற ஆள் இல்லை. இது பாரிய இராஜதந்திர அழுத்தம் எங்களுடைய அழுத்தங்கள் காரணமாக அந்த விடயங்களை செய்த கொடுத்தார்.

நான் எதிர்பார்ப்பது என்னவென்றால் தந்தை செல்வநாயகம் போன்ற தலைவர்களாக இவர்கள் மாறவேண்டும் என்பதுதான். வடகிழக்கில் ஆரம்பகாலத்தில் நானும் சிறுவனாக இருக்கின்றபோது தமிழ் மக்கள் தெற்கிலிருந்த அரசியல் ஆட்சியாளர்களால் பட்ட வேதனைகள் அவர்களுக்கு நடந்த அநீதிகளை எங்களால் இப்போதும் மறக்க முடியாது. எனவே இந்த இரு சமூகங்களும் இப்போது பலவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள். 70 வருட தமிழ் மக்களது போராட்டம் தோற்கும் நிலைக்கு வந்திருப்பதாகக் கூறுகின்றார்.

அதற்குக் காரணம் இந்திய வெளியுறவுச் செயலாளர், 13க்கு மேல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார். அதாவது மாகாண சபை முறைமையைத் தான் செய்ய முடியுமே ஒழிய வேறு எதனையும் செய்ய முடியாது என்கின்றனர். இந்த விடயம் பலத்த விரக்தி நிலையை தமிழ் அரசியலில் ஏற்படுத்தியிருக்கிறது. இது தமிழ் மக்களது பலவீனம். முஸ்லீம் மக்களுடைய பலவீனம், இன்று தெற்கில் முஸ்லீம் இளைஞர்களைப் பந்தாடுவதற்காக மதத் தீவிரவாதிகள் என்கிற ஒரு பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இரு சமூகங்களும் பலவீனப்பட்ட நிலையில் இரு சமூகங்களும் ஒன்றிணைந்து தமது அரசியல் தீர்வினை நோக்கிப் பயணிக்க வேண்டிய காலம் இது.

எனவே இரு சமூகங்களின் தலைவர்களும் இதயசுத்தியாக ஒரு வேலைத்திட்டத்திற்கு வரவேண்டும். சாணக்கியன் எம்பி வடகிழக்கு இணைத்து தான் ஒரு முதலமைச்சராக வருவதற்கான ஆசை இருப்பதாக அவர் குறிப்பிடுகின்றார். அவர் எந்தவொரு காலகட்டத்திலும் கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம் மக்களது அபிலாசைகள். அவர்களுக்கென்று ஒரு தனியலகு கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்கென்று தனியான மாகாண சபை முறைமை வேண்டும் என்று எதுவுமே பேசாமல் வெறுமையாகப் பேசுவது முஸ்லீம் தலைமைகள் என்கிற ரீதியில் எங்களுக்குப் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. கல்முனை என்பது முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஒரு மாநகரம். இது நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது. இதில் எதேச்சையாக பிரிக்கப்படவேண்டும். முஸ்லீம்களின் அபிலாசைகளைப் பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை என்ற அடிப்படையில் அவர் செயற்படுவது அவரை உண்மையான இதயசுத்தியுள்ளவராக எங்களால் பார்க்க முடியாதுள்ளது.

**கேள்வி :- இதற்கு முன்னர் வியாழேந்திரன் அவர்களும் இவ்வாறு தானே பேசினார்?**

பதில் :- வியாழேந்திரன் அவர்கள் முஸ்லீம்கள் சம்பந்தமாகப் பேசுவதற்கு வரவில்லையே. வாரது சாணக்கியன் அவர்கள். வியாழேந்திரன் அவர்கள் தமிழ் மக்களுக்காகப் பேசுகிறார். சாணக்கியன் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லீம் மக்களுக்காகவும் தான் செயற்படுகின்றேன் என கூறுகின்றார். சாணக்கியன் எம்பி தமிழ் மக்களுக்காக மாத்திரம் பேசினால் பிரச்சினையில்லை. அவர் தன்னை அடையாளங்காட்டுகின்றார், நான் முஸ்லீம் மக்களுக்காகவும் பேசுகின்ற ஒருவர் என முஸ்லீம் சமூகத்திற்கு மத்தியிலும் பிரச்சாரத்தை முன்னெடுக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் கல்முனை விவகாரத்தில் ஒரு சரியான நிலைப்பாட்டினைக் கூறவேண்டும். துணிந்து சொல்லவேண்டும். செல்வநாயகம் ஐயா போன்று கூறவேண்டும்.

அதேபோன்று மட்டக்களப்பு வாழைச்சேனை மத்திய நிலங்கள் அரசாங்கத்தினால் வர்த்தமானியிடப்பட்டுள்ளது. ஆனால் அது இன்னமும் கையளிக்கப்படவில்லை. அங்கு 26 வீதமான முஸ்லீம்கள் வாழ்கின்றார்கள். ஆனால் 1.5 வீதமான நிலங்கள் தான் மட்டக்களப்பு முஸ்லீம்களுக்கு என்று இருக்கிறது. அதேபோல் தோப்பூர் உப பிரதேச செயலகமாக கடந்த பல தசாப்த காலங்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதனை சுமந்திரன் தரமுயர்த்தவிடமாட்டேன் என்று கூறுகின்றார். எனவே இதையெல்லாம் அவர்கள் செய்துவிட்டு முஸ்லீம் சமூகத்திற்குள் வந்து, தமிழ் - முஸ்லீம் இன நல்லுறவினைப் பேணவேண்டும் என்று பேசுவது சந்தேகத்துக்குரியதாகவிருக்கின்றது.

**கேள்வி :- அரசாங்கம் திட்டமிட்டு சாணக்கியன் அவர்களை செயற்படுத்துகிறதா? அல்லது நீதியமைச்சர் அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றாரா? ஏதாவது சந்தேகங்கள் உங்களுக்கு இருக்கிறதா?**

பதில் :- எனக்கு சந்தேகம் வரவில்லை. ஆனால் பாராளுமன்றத்தில் ஒரு சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் என நீங்கள் கேட்கவேண்டாம். அவர்கள் எனது உரையின் பின்பு சாணக்கியன் தாக்குதல் செய்யச்சொன்ன விடயத்தை கண்டித்து என்னுடன் வருத்தத்தை தெரிவித்தார்கள். ஆனால் அவருடைய அரசியல் நிலைப்பாடு எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், அவர் ஆட்சியாளர்களோடு செயற்பட முனைகின்றார். எனவே அவர் எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியினையும் கைப்பற்றி எதிர்காலத் தேர்தல்கள் வரும்பொழுது ஆட்சியாளர்களுடன் பேரம்பேசுகின்ற. அதற்காகத்தான் முஸ்லீம் மக்களும் தன்னுடன் இருக்கிறார்கள் எனக் காட்டி தன்னுடைய பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு தந்திரோபாய அரசியலை முன்னெடுக்கின்றார். எனவே இதில் நீங்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். தமிழ் - முஸ்லீம் அரசியல்வாதிகள் கொள்கை ரீதியானவர்கள். நாங்கள் மிக எச்சரிக்கையாகப் பயணிக்கவேண்டும் என்ற செய்தியை பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்கள்.

**கேள்வி :- சமூக வலைதளங்களில் சாணக்கியன் எம்பி தொடர்பாக முஸ்லீம் மக்களே நல்ல விடயங்களைப் பதிவு செய்கிறார்கள். நீங்கள் கூறியதைப் போல அவரது எதிர்காலச் செயற்பாடுகள் இருந்தாலும் நாங்கள் அவரிடமும் பல கேள்விகள் கேட்கவேண்டிய நிலை இருக்கிறது. எனினும், முஸ்லீம் மக்களின் இன்றைய நிலைக்கு நீங்கள் என்ன கூறப்போகின்றீர்கள்? அதற்குக் காரணம் யார்?**

பதில் :- நீங்கள் கூறிய வலைதளங்களில் பலவற்றை நீங்கள் பார்த்திருப்பீர்கள். முஸ்லீம் தரப்பினர் வலைதளங்களைப் பாவிக்கிறார்கள். போலியானவை இருக்கின்றன. அவரது நிதியினூடாக கட்டணம் செலுத்திய முறையில் விளம்பர யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறார் சாணக்கியன். நாங்கள் முஸ்லீம் மக்களுடன் களத்தில் இருக்கிறவர்கள். அன்று நான் பாராளுமன்றில் பேசிய விடயம் எமது மக்கள் மத்தியில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. நீங்கள் கூறிய விடயம் உண்மை. நாங்கள் அனைவரும் இணைந்து பாராளுமன்றில் பேசினோம். எம்மில் பலர் செய்த தவறுகள் இன்றைய முஸ்லீம் அரசியலை வேறு திசைக்குக் கொண்டுசென்றிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினரைத் தாக்கத் சொன்னாரே, வன்முறையைத் தூண்டிவிட்டாரே. அன்றே பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் அவர்களும் ஹக்கீம் அவர்களும் கண்டித்திருக்கவேண்டும். எமது சமூகத்தை தவறாக வழிநடத்தவேண்டாம் எனக் கூறியிருக்கவேண்டும்.

ஆனால் இதைச்செய்ய இவர்கள் தவறிவிட்டார்கள். நான்செய்தேன். என்னுடைய அரசியலில் காழ்ப்புணரச்சி உள்ள பலர் இருக்கிறார்கள். கடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் சுமார் 2 இலட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த விருப்பு வாக்குகள் சுமார் 37000. அப்போது 15 வீதம் தான் எனக்கு வாக்களித்தார்கள். ஆக எனக்கு வாக்களிக்காத சகோதரர்கள் இருக்கிறார்கள். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வாக்களிக்காமல் இருக்கிறார்கள். எனவே அவற்றையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை.


ஆனால் என்னுடைய அரசியல் சித்தாந்தம் என்பது முஸ்லீம் சமூகம் சம்பந்தமாக. முஸ்லீம் சமூகம் கொள்கை ரீதியாகப் பயணிக்கவேண்டும். முஸ்லீம் சமூகத்தை நோக்கி சர்வதேச ரீதியாக நடக்கின்ற சூழ்ச்சியில் முஸ்லீம் சமூகம் சிக்கிவிடக்கூடாது. தெற்கில் முஸ்லீம் சமூகத்திற்கு ஏற்பட்டுவருகின்ற இந்தக் களங்கத்தை நிவர்த்திக்கின்ற அரசியல் வேலைத்திட்டத்தைச் செய்யவேண்டுமே தவிர, உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு இவ்வாறான சமூக வலைதளங்களில் கிண்டலடிக்கும் காலம் அல்ல இது. இது தான் என்னுடைய அரசியல் நிலைப்பாடு.

**கேள்வி :- பல முஸ்லீம் தலைவர்கள் சாணக்கியன் அவர்கள் முஸ்லீம்களுக்காக குரல் கொடுத்தது சரி என்றும் கூறியிருக்கின்றார்கள். நீதியமைச்சராக முஸ்லீம் நபர் ஒருவர் இன்று பதவியில் இருக்கின்றார். உங்களது தலைவரான ஹக்கீம் அவர்கள் கூட குரல்கொடுத்து வருகின்றார். எனினும் இவர்கள், அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக ஓங்கிக்குரல் கொடுக்காமல் பதில்களால் இழுத்தடிப்புச் செய்கின்றவர்களாகவே மக்கள் இன்று இவர்களைப் பார்க்கின்றார்கள். இது பற்றி?**

பதில் :- நீதியமைச்சர் அலி சப்ரி அவர்கள் தேசியப்பட்டியல் ஊடாக வந்த ஒரு அமைச்சர். அவர் கூறுகின்றார் நான் முஸ்லீம்களின் பிரதிநிதி. தலைமை தாங்கும் ஒருவன் அல்ல என. ஆனால் முஸ்லீம்கள் தொடர்பான விடயங்களில் குரல்கொடுக்கின்ற ஒரு அமைச்சராக இருக்கின்றார். அதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. வெளியில் கூற முடியாது. முஸ்லீம் சமூகத்திற்காக பல விடயங்களைச் செய்துகொண்டிருக்கிறார். அவருடன் நாங்கள் தொடர்ச்சியாகப் பேசுகின்றோம். அவர் தேசியப்பட்டியல் ரீதியான ஒருவர். அவருக்கு முஸ்லீம்கள் ஆணையைக் கொடுக்கவில்லையே. ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் அவர்களுக்கு கொடுத்திருக்கின்றது. அலி சப்ரி அவர்களுக்குக் கொடுத்திருந்தால் அவரை நோக்கி விரல் நீட்டலாம். அதுதான் அவரது விவாதமாகவிருக்கின்றது. அவர் ஒரு சட்டத்தரணி. அவர் என்னிடம் கூறுகின்றார் வெற்றுப் பெட்டியாக நான் எவ்வாறு ஜனாதிபதியுடன் சண்டை பிடிக்க முடியும் என. அவர் கொழும்பினை அடியொட்டி வாழ்ந்தவர். போராட்டங்களுக்கு முகங்கொடுக்காதவர். நாங்கள் அப்படியல்ல. வடகிழக்கில் போராடி வருகிறவர்கள். போராட்டங்களுக்கு முகங்கொடுத்து வருபவர்கள். ஆனால் நாங்கள் தெளிவான முடிவில் இருக்கிறோம்.

**தொடரும்...**

## கடற்றொழிலாளர் விவகாரத்தில் பொறுப்பற்ற முறையில் என்னால் கதையளக்க முடியாது - நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு



இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் ஏனையோர் போன்று பொறுப்பற்ற முறையில் ஏனோ தானோ என்று தன்னால் கதையளக்க முடியாது என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல், நான்கு திட்டங்களை முன்வைத்து உறுதியுடன் செயலாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன், கடந்த 27 ஆம் திகதி பருத்தித்துறை வத்தராயனில் இருந்து கடல் தொழிலுக்கு சென்ற நிலையில் உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர்களுக்கு அஞ்சலியையும் தெரிவித்தார்.

மேலும், நீதிக்கான குரல்கள் ஒலிக்கட்டும் நியாயங்கள் வெல்லட்டும் என்று தான் கேட்டுக்கொண்டதற்கு அமைய நீதிக்காக குரல் கொடுக்கும் கடற்றொழிலாளர்களின் கூடாரத்தில் அநீதியின் குழப்பக் காரர்கள் புகுந்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோதத் தொழில்முறைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டங்கள் தொடர்பாக இன்று நாடாளுமன்றில் விசேட அறிக்கையினை சமர்ப்பித்து உரையாடற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில், எமது கடல் எல்லை - வளங்கள் யாவும் எமது மக்களுக்கே சொந்தம். கடல் எல்லைத் தாண்டி வந்து அத்துமீறுகின்ற செயல் இன்று நேற்றுள்ள பிரச்சினை அல்ல. அது, நீண்ட கால பிரச்சினையாகும். இதற்கு முடிவு கட்டிட நான் எடுத்து வருகின்ற முயற்சிகள் யாவும், வெறும் சுயலாப அரசியல் நோக்குடையவை அல்ல. இது என் உதிரத்திலும், உணர்விலும் ஒன்று கலந்துவிட்ட பிரச்சினைகளில் ஒன்றாகும்.

நான் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்பதற்கு முன்னரும் நேரில் சென்று, களத்தில் நின்று எமது கடற்றொழிலாளர்களின் விவகாரங்களை சரிவரக் கையாண்டிருக்கின்றேன். கச்சதீவில் இரு தரப்பு கடற்றொழிலாளர்களையும் வைத்து, பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமன்றி, இந்திய மத்திய, மாநில தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடனும் கலந்துரையாடி வருகின்றேன். ஆகவே, இது என் கடமை மட்டுமல்ல, என் உள்ளார்ந்த உணர்வும் கூட. இந்தப் பிரச்சினையில் இரு நாடுகளும் தொடர்புபடுவதால், இராஜதந்திர முறையிலான முன்னெடுப்புகள் ஒருபுறம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக, இழுவை வலைப் படகுகளின் மூலமான தொழில் முறை என்பது இரு நாட்டு கடல் வளங்களைச் சுரண்டுவதுடன், மீனின இனப் பெருக்கமும் அழிவுற்று வருகின்றன.

அதேநேரம், எமது கடற்றொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள், படகுகள் என்பனவும் பாதிக்கப்பட்டு, அழிவடைகின்றன.

எனவே, இது தொடர்பில் இருநாட்டு கடற் றொழிலாளர்களுக்கிடையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

அடுத்ததாக, எல்லைத் தாண்டி வருகின்ற இழுவை வலைப் படகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தல்.

அடுத்து, இவ்வாறு சட்ட நடவடிக்கைளின் ஊடாக அரசுடமையாக்கப்படுகின்ற படகுகளை, அவற்றின் இழுவை வலை மடிகளை அகற்றி, எமது கடற்றொழிலாளர்களுக்கு நீதமன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுத்தல்.

இராட்சத படகுகளை எதிர்கொண்டு, சிறிய படகுகளில் தொழில் செய்ய இயலாத எமது கடற்றொழிலாளர்களுக்கு இது தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும், அவர்களது வாழ்வாதாரங்களை உயர்த்துவதாகவும் அமையும். இந்த திட்டங்களே நான் வகுத்திருக்கும் திட்டங்களாகும்.

நீதியான தீர்வு நோக்கிய எமது கடற்றொழிராளர்களின் குரல் வளைகளை நெரிப்பதுபோல், நீதியின் கூடாரத்தினுள் ஒட்டகங்களும், குள்ள நரிகளும் நுழைந்தன. ஆனாலும், நீதியின் குரலாக நிமிர்ந்த எங்கள் கடற்றொழிலாளர்களின் தீர்வு நோக்கிய பயணத்தை திசை திருப்ப முயன்றவர்கள் தோற்றுப் போனார்கள்.

இதற்கு முன்னர் உள்ளூர் இழுவை வலைப் படகுகளிலிருந்து கடற்றொழில் அமைச்சர் ஒரு இரவுக்கு ஒரு படகிலிருந்த 5000 ரூபா வீதம் பெறுவதாக கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் 22.10.2021 நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தியே அவர் இந்த அப்பட்டமான பொய்யான தகவலைத் தெரிவித்திருந்தார். அவரது அக் கூற்றில் உண்மை இருப்பதாக அவர் கருதினால், நீதிமன்றத்தின் ஊடாக அதை அவர் நிரூபிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்திறகு வெளியில் அவர் இக்கருத்தினை வெளியிட்டிருந்தால், நான் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் அவர் அறிவார்.

ஏற்கனவே இத்தகைய போலியான கருத்துகள் தொடர்பில் நான் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும், அவற்றில் நான் வெற்றிகண்டதும் அவர் அறியாமல் இல்லை. எனவே, அவர் இக்கூற்றினை நிரூபிக்க முன்வர வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

## பெப்ரவரி 11 ஆம் திகதி உலக யுனானி தினம்

வைத்தியர் (திருமதி). றிப்ஹறா ஜெமீல்
BUMS, Dip.in psychological & Counselling (NISD),
Dip.in Accupuncture (CHS), Master diploma in cupping therapy (IISDT)
மத்திய மருந்தகம்
வெலிகம




யுனானி வைத்தியர் வைத்தியக் கலாநிதி ஹக்கீம் அஜ்மல்கான் *1868* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *11* ஆம் திகதி இந்தியாவில் பிறந்து யுனானி மருத்துவத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வித்திட்டு அளப்பரிய சேவைகளையும் செய்தவராவார். அவரின் பிறந்த தினத்தையும், யுனானி மருத்துவத்துறைக்கு அவர் செய்த அளப்பரிய சேவைகளையும் கருத்திற்கொண்டு முதன்முதலாக *2017* ஆம் ஆண்டு CRIUM Hyderbad இல் கொண்டாடப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி *11* ஆம் திகதி உலக யுனானி தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தின் முக்கிய நோக்கம் யுனானி மருத்துவமுறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

மருத்துவத்தின் தந்தையான புஹ்ராத் என அழைக்கப்படும் ஹிப்போகிரட்டீஸ் (Hippoocrates) இன் humoral theory இனூடாக கிரேக்கத்தில் ஆரம்பமான யுனானி வைத்தியம் இந்தியாவினூடாக அரபு வைத்தியம் என்ற பெயரில் அரபிகளின் கரையோர வருகையுடன் *10 - 12* ஆம் நூற்றாண்டுகளில் வந்தடைந்தது. அரசர்களின் குடும்ப வைத்தியராக காலாகாலம் அவர் பணியாற்றியதிலிருந்து இலங்கை மண்ணில் இவ்வைத்தியத்துறை சேர் றாசிக் பரீட் மற்றும் வைத்தியர் கே.பாலசிங்கம் அவர்களின் அயராத முயற்சியால் இராஜகிரிய சுதேச மருத்துவக் கல்லூரியில் *1929* ஆண்டு இணைக்கப்பட்டது.

இந்த வைத்திய முறைகளை கற்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து விரிவுரையாளர்கள் கொண்டுவரப்பட்டு யுனானி மருத்துவக் கல்வியை பலருக்கும் வழங்கியதுடன் இப்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக மிளிர்ந்து நிற்கின்றது.

அங்கு ஆயுர்வேத, யுனானி, சித்த மருத்துவ முறைகள் கற்றுக் கொடுக்கப்பட்டு இன்றும் அதன் சேவைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இலங்கையில் ஆசியாவிற்குறிய எல்லா சுதேச வைத்திய முறைகளும் *1961* act of Ayurveda என்ற சட்டத்தில் ஆயுர்வேத என்ற சொல்லிற்குள்ளே இந்த வைத்திய முறைகள் கொண்டுவரப்பட்டுள்ள விடயம் குறிப்பிடத்தக்கதாகும்.

Humoral theory யை அடிப்படையாகக் கொண்ட யுனானி மருத்துவம் ஒரு holistic approach யைக் கொண்டுள்ளது. இதன் மூலம் நோய்களிலிருந்து சிகிச்சை பெறவும் நோய் வரும் முன் காக்கவும் பல நுட்பங்களைக் கொண்டுள்ளது. நாடித்துடிப்பின் ஓட்டத்தினை வைத்து உடல் சமநிலைக் குழப்பத்தை அறிந்து அதற்கேற்ப சிகிச்சையளிக்கும் உண்ணதமான ஒரு முறையே யுனானி வைத்திய முறையாகும்.

"நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான யுனானி மருத்துவத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து" என இவ்வாண்டு சர்வதேச மாநாட்டின் கருப்பொருளாக எடுக்கப்பட்டு இன்று கொண்டாடப்படுகின்றன. உணவே ஆற்றலின் அடிப்படை ஆதாரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். உடலின் இயல்பான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி அதனுடன் சேர்ந்ததான ஆரோக்கிய பராமரிப்பு சார்ந்துள்ள ஆரோக்கியமான உணவு போன்ற விடயங்கள், உடலின் இயற்கையான பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துதல், நோய் எதிர்ப்புச் சக்தி உகந்த ஆரோக்கியத்தை பேணுவதற்கும் நோய்களைத் தடுப்பதற்கும் முக்கியமானதாக இருக்கின்றன.

யுனானி மருத்துவத்தில், ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் பல்வேறு நோய்கள் மற்றும் சீர்குலைவுகளைத் தடுப்பதற்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களுக்கு விரிவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன. யுனானி வைத்திய முறையின் சேவை அனைத்து மக்களையும் சென்றடைந்து ஆரோக்கியமானவாழ்க்கைமுறையுடன் வாழவேண்டும் என்பதற்காக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

**பைஷல் இஸ்மாயில்**



# உலக பார்வை



## கழுத்தில் டயருடன் 6 ஆண்டுகளாக அவதிப்பட்ட முதலை

இந்தோனேசியாவில் சுலாவேசி மாகாணம் பலூ நகரில் உள்ள ஆற்றில் வாழ்ந்து வரும் ஒரு முதலையின் கழுத்தில் 6 ஆண்டுகளுக்கு முன்பு இருசக்கர வாகனத்தின் டயர் சிக்கியது. முதலை வளரும் போது டயர் கழுத்தை இறுக்கி முதலை இறக்க கூடும் என மக்கள் அச்சப்பட்டனர். இதனால் முதலையின் கழுத்தில் சிக்கிய டயரை அகற்ற உள்ளூர் நிர்வாகம் பல்வேறு முயற்சிகளை எடுத்தது.

ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தது. முதலையின் கழுத்தில் இருந்து டயரை அகற்றும் நபருக்கு சன்மானம் வழங்கப்படும் என கடந்த 2020-ம் ஆண்டு உள்ளூர் நிர்வாகம் அறிவித்தது. இருப்பினும், முதலை மீதுள்ள அச்சம் காரணமாக யாரும் பெரிதாக அதில் ஆர்வம் காட்டவில்லை. முயற்சித்த ஒரு சிலருக்கும் தோல்வியே கிடைத்தது.

இந்த நிலையில் உள்ளூரை சேர்ந்த டிலி (வயது 35) என்ற விலங்குகள் நல ஆர்வலர் பிரத்யேக பொறி ஒன்றினை அமைத்து அதில் கோழியாக இரையாக வைத்து, முதலையை பிடித்தார். அதன் பின்னர் உள்ளூர் மக்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களின் உதவியோடு முதலையின் கழுத்தில் இருந்து டயரை வெட்டி எடுத்தார். அதனை தொடர்ந்து முதலை மீண்டும் ஆற்றில் விடப்பட்டது.



## ஹிஜாப் விவகாரம் - மலாலா யுசுப்பின் பதிவு

கர்நாடக மாநிலத்தில் உள்ள ஒரு கல்லூரி மாணவிகளை ஹிஜாப் அணிந்து வரக்கூடாது என்ற விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. தற்போது, ஹிஜாப் VS காவித்துண்டு என்ற மோதல் போக்கு உருவாகியுள்ளது. மாநில அரசு சீருடை அணிந்து வர வேண்டும் என உத்தரவிட்ட நிலையில், இந்த விவகாரம் அந்த மாநில உயர்நீதிமன்றம் வரை சென்றுள்ளது. உயர்நீதிமன்றம் மாணவர்கள் அமைதி காக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த விவகாரம் கர்நாடக மாநிலத்தை தவிர்த்து மற்ற மாநிலங்களுக்கு பரவி விடக்கூடாது என தலைவர்கள் கவலை தெரிவித்து வர, மத்திய பிரதேசம் மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் இதுகுறித்து கருத்து எழுந்துள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தானைச் சேர்ந்த நோபல் பரிசு வென்ற மலாலா யுசுப்சாய், கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்டுள்ள ஹிஜாப் விவகாரம் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார். அதில் "கல்லூரி நம்மை கல்வியா- ஹிஜாபா? என்பதை தேர்வு செய்யும் கொள்ளும் நிலைக்கு தள்ளியுள்ளது. மாணவிகள் அவர்களுடைய ஹிஜாப் காரணத்தால் பள்ளிக்கு செல்ல அனுமதி மறுப்பது பயங்கரமானது. குறைவான அல்லது அதிகமான அளவில் அணிவதால் பெண்களின் புறக்கணிப்பு தொடர்கிறது. இந்தியத் தலைவர்கள் முஸ்லிம் பெண்களை ஓரங்கட்டுவதை நிறுத்த வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக மாநிலத்தின் ஒரு கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் குறித்து மலாலா கருத்து கூறியது. இந்த விவகாரம் உலக அளவில் விவாதத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், இந்தியாவில் ஒரு மாநிலத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து மலாலா கருத்து கூறுவது தேவையில்லாத சர்ச்சையை ஏற்படும் எனவும் கருதப்படுகிறது.

பாகிஸ்தான் நாட்டில் பிறந்த மலாலா குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கல்வி, உரிமைக்காக குரல் கொடுத்தவர். இதனால் கடந்த 2012-ம் ஆண்டு தனது 11 வயதில் தலிபான் பயங்கரவாதிகளில் சுடப்பட்டார். பின்னர் இங்கிலாந்தில் சிகிச்சை பெற்று உயிர்பிழைத்தார். இவருக்கு 2014-ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இளம் வயதில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## ரூ.5 கோடியை சுருட்டிய கன்னியாஸ்திரி

அமெரிக்காவை சேர்ந்த கன்னியாஸ்திரி மேரி மார்கரெட் க்ரூப்பர் (80). இவர், லாஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் உள்ள ரோமன் கத்தோலிக் தொடக்கப் பள்ளியில் முதல்வராக பணியாற்றி வந்தார்.

சுமார் அறுபது ஆண்டு காலமாக தனது ஆசிரியர் பணியை மேற்கொண்டு வந்த க்ரூப்பர் சூதாட்டத்தில் அடிமையாகியதாக தெரிகிறது. சூதாட்டம் விளையாட அதிகளவில் பணம் தேவைப்பட்டதால், பள்ளி நிதியில் கைவைக்க க்ரூப்பர் முடிவு செய்துள்ளார். அதன்படி, பள்ளிக்கு செலுத்தப்படும் கல்விக் கட்டணம், நன்கொடைகள் உள்ளிட்டவையை க்ரூப்பர் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ரகசிய வங்கி கணக்கிற்கு அனுப்பி வந்துள்ளார்.

இதுபோன்று, சுமார் 5.97 கோடி ரூபாயை சுருட்டி சூதாட்டத்திற்கும், ஆடம்பரமான சுற்றுலாப் பயணங்களுக்கும் பயன்படுத்தி வந்துள்ளார்.

இதுதொடர்பாக பள்ளி நிர்வாகத்திற்கு சந்தேகம் ஏற்பட்டதால் சோதனையில் ஈடுபட்டனர். இதுகுறித்து முன்னதாக தெரிந்துக்கொண்ட க்ரூப்பர் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அழித்துவிடுமாறும் ஊழியர்களிடம் கூறியது விசாரணையில் தெரியவந்துள்ளது.

பின்னர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட க்ரூப்பர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். நீதிமன்ற விசரணையின் இறுதி முடிவில் க்ரூப்பருக்கு ஓராண்டு சிறை தண்டனை வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

## இளம் மனைவியின் துண்டிக்கப்பட்ட தலையுடன் தெருவில் நடந்த நபர்

விபச்சாரத்தில் ஈடுபட்டதாக கூறி தனது இளம் மனைவியின் துண்டிக்கப்பட்ட தலையுடன் தெருவில் நடந்த நபர் குறித்த வீடியோ ஈரான் நாட்டின் சமூக வலைதளங்களில் பரவியது. இது அந்நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அந்த வீடியோவை ஆய்வு செய்த பொலீசார், மோனா ஹெய்டாரி என்ற 17 வயது பெண்ணின் தலை அது என்பதை கண்டறிந்தனர். ஈரானின் தென்மேற்கு நகரமான அஹ்வாஸில் அந்த பெண் வாழ்ந்து வந்த இடத்தில் சோதனை நடத்தினர். அப்போது அங்கு மறைந்திருந்த அந்த பெண்ணின் கணவர் மற்றும் மைத்துனர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இந்த கொடூர சம்பவம் தொடர்பாக ஈரானிய செய்தித்தாள்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஈரானின் மகளிர் விவகாரங்களுக்கான துணைத் தலைவர் என்சீஹ் கசாலி, பாராளுமன்றத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார். இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்க விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார். ஹெய்டாரியின் கொலையைத் தொடர்ந்து, குடும்ப வன்முறைக்கு எதிராக பெண்களைப் பாதுகாக்க சட்டங்களைச் சீர்திருத்த வேண்டும் என்றும், பெண்களின் திருமணத்திற்கான சட்டப்பூர்வ வயதை உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. ஈரானில் கடந்த 2020 ஆண்டு தனது மகளின் தலையை துண்டித்து கௌரவ கொலை செய்த தந்தைக்கு ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## ஒமிக்ரோன் பரவல் - மீண்டும் பொதுமுடக்கம்!

சீனாவின் பெய்சே நகரில் ஒமைக்ரான் வகை கொரோனா காரணமாக அந்த நோய்த்தொற்று அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, அந்த நகரில் கடுமையான பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி அந்த நகரில் புதிதாக 135 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், கொரோனாவுக்கு எதிரான 'பூஜ்ஜிய-சமரச' கொள்கையைக் கடைப்பிடித்து வரும் சீன அரசு, பெய்சேவில் பொதுமுடக்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, அந்த நகரில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது அத்தியாவசியமற்ற தொழில் நிறுவனங்கள், கடைகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது நகரவாசிகளுக்கு மிகப் பிரம்மாண்டமான அளவில் கொரோனா பரிசோதனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

உணவகங்களில் வாடிக்கையாளர்கள் அமர்ந்து சாப்பிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாகன ஓட்டுநர்கள் வீட்டுக்குள் முடங்கியிருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வகையில், சாலை விளக்குகளில் சிவப்பு விளக்கு மட்டுமே எரிய உத்தரவிடப்பட்டுள்ளது.










# நீதித்துறையில் வெள்ளி விழாவை பூர்த்தி செய்யும் முதல் தமிழ் நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன்!

இன்றைய இலங்கை நீதிபதிகளின் வெள்ளி விழா பூர்த்தி செய்யும் முதல் தமிழ் நீதிபதியாக நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்கிறார்.

05.02.1997 நீதிபதியாக நியமனம் பெற்று வவுனியாவில் தனது முதல் நியமனத்தை நீதவானாக ஆரம்பித்து 05.02.2022 அதே வவுனியாவில் மேல் நீதிமன்ற நீதிபதியாக 25 ஆண்டுகள் பூர்த்தி செய்யும் முதல் தமிழ் நீதிபதி என்ற பெருமைக்குரியவர் ஆகின்றார்.

இன்றைய வடக்கு – கிழக்கு மாகாண அனைத்து நீதிபதிகளிலும் 25ஆண்டுகளை பூர்த்தி செய்யும் முதல் பெருமைக்குரிய தமிழ் நீதிபதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

1999 யாழ். செம்மணி புதைகுழி வழக்கு.
1999 மன்னாரில் காமாலிக்கா கொலை வழக்கு, மடு தேவாலய குண்டு வெடிப்பு வழக்கு, மற்றும் லயன் எயார் குண்டு வெடிப்பு வழக்கு
2000 – 2008 ஒன்பது ஆண்டுகள் கடுமையான யுத்தம் நிலவிய காலப்பகுதியில் வவுனியாவில் நீதிபதியாக கடமையாற்றியமை. ஜெயசிக்குறு தாக்குதல் காலம், யுத்த நிறுத்த காலம், மீண்டும் இறுதி யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட யுத்த காலத்தில் வவுனியா நீதிபதியாக கடமையாற்றினார்.
2006 வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் கொலை வழக்கு
2008 மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டமை
2009 இல் திருகோணமலை கோயில் குருக்கள் மனைவி கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கியமை, அந்த கொலை வழக்கு தீர்ப்பு உயர் நீதிமன்றம் வரை சென்று தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டமை.
2014 கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம்
2015 கணவர் கொலை வழக்கில் இஸ்லாமிய பெண்ணிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை, தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டமை.
2015 யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்று மூவர் அடங்கிய தீர்ப்பாயத்தில் 1 நீதிபதியாக வித்தியா கொலை வழக்கில் தனித் தீர்ப்பு எழுதி மரண தண்டனை விதித்தமை.
2018இல் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்று யாழ். இளைஞன் கொலை வழக்கில் இரு இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதித்தமை.
2022இல் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டு, தயா மாஸ்டர் வழக்கில் இரு வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கி விடுதலை செய்தமை உள்ளிட்டவை குறிப்பிடத்தக்கவை.

25 வருட காலப் பகுதியில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேற்குறித்த முக்கிய வழக்குகளுக்கான தீர்ப்புக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 13.02.2022 அன்று வெளியிடப்பட்டது.